©
தமிழ்நாடு அரசு
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 12.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 31] சென்னை, புதன்கிழமை, ஆகஸ்ட் 3, 2022
ஆடி 18, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு—2053

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2022 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 17 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத்தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது.

**சட்ட எண். 34/2022.**

**மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் 1978 ஆம் ஆண்டு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சட்டம் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

### பகுதி–I.

### முன்னுரை.

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

### பகுதி–II

### 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் IV/1919

99–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடுவதான) 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 99 ஆம் பிரிவிற்கு பின்பு பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:–

“**99–A. சொத்து வரியினை உயர்த்துதல்.–** மன்றமானது, தீர்மானத்தின் மூலம் அவ்வப்போது, அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வீதங்களுக்குள், சொத்துவரியினை அத்தகைய வீதத்தில் உயர்த்தலாம்.”.

202–B எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

3. முதன்மைச் சட்டத்தின் 202–A எனும் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது,–

"202–B. **மலக்கசடு அல்லது கழிவுநீர் அகற்றுதலுக்கான இடங்களை அடையாளம் காணுதல்.–(1)** சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியத்தின் மேலாண்மை இயக்குநருடன் கலந்தாலோசித்து, ஆணையரானவர், சரக்குந்துகள் இழுவை வண்டிகள் அல்லது குறிப்பிடப்பட்ட வாகனங்கள் எதனின் மூலமாகவும் மலக்கசடுகள் அல்லது கழிவுநீரினை வெளியேற்றுதலுக்கான அத்தகைய இடங்களை அடையாளம் காணுதல் மற்றும் அடையாளம் காணப்பட்ட இடங்களில் வெளியேற்றுவதற்காக மலக்கழிவுகள் மற்றும் கழிவுநீரினை கொண்டு செல்வதற்கு வாகனத்தின் ஓட்டத்திற்கான தகுந்த வழிகளை மேலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(2) மலக்கசடுகள் அல்லது கழிவுநீரைக் கொண்டுசெல்லும் நோக்கத்திற்காக குறிப்பிடப்பட்ட வாகனங்களின் இயக்கம் மற்றும் ஓட்டம் மற்றும் அதனோடு தொடர்புடைய பிற பொருட்பாடுகள் எதுவும், 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்க ஒழுங்குமுறைப்படுத்துதல் வேண்டும்.". தமிழ்நாடு சட்டம் 28/1978.

பகுதி–III.

**1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

81–B எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

4. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடுவதற்கான) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 81–A ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் V/1920.

"**81–B. சொத்து வரியினை உயர்த்துதல்.–** மன்றமானது, தீர்மானத்தின் மூலம் அவ்வப்போது, அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வீதங்களுக்குள், சொத்து வரியினை அத்தகைய வீதத்தில் உயர்த்தலாம்.".

VIII–A எனும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

5. முதன்மைச் சட்டத்தின் VIII–ஆம் அத்தியாயத்திற்கு பின்பு, பின்வரும் அத்தியாயமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**"அத்தியாயம்-VIII A.**

**மலக்கசடு மற்றும் கழிவுநீர்.**

**161-A. பொருள் வரையறைகள்.–** இந்த அத்தியாயத்தின் நோக்கத்திற்காக,–

(a) "அகற்றும் வசதி" என்பது, வகுத்துரைக்கப்படக்கூடிய அறிவியல் பூர்வமான சுத்திகரிப்பு மற்றும் மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை அகற்றுதலுக்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்று பொருள்படும்;

(b) "உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு" என்பது நகராட்சி மற்றும் பேரூராட்சிக்கு தொடர்புடையவற்றில் முறையே, நகராட்சியின் ஆணையர் மற்றும் பேரூராட்சியின் செயல் அலுவலர் என்று பொருள்படும்;

(c) "மலக்கசடு" என்பது, செரிமானமாகாத அல்லது பாதி செரிமானமான அரைநீர்ம அல்லது அரைதிண்ம வடிவிலுள்ள, மலக்கழிவு மற்றும் சாம்பல் நீருடனான அல்லது இல்லாத கருப்புநீரின் சேர்க்கை என்று பொருள்படும்;

(d) "உரிமதாரர்" என்பது, இந்த அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றினை வைத்து வரும் நபரெவரும் என்று பொருள்படும்.

(e) "அனுபவத்திலிருப்பவர்" என்பது, நகராட்சி அல்லது பேரூராட்சி எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதி ஒன்றினை அனுபவத்திலிருக்கும் நபர் ஒருவர் என்று பொருள்படும் மற்றும் அத்தகைய கட்டடத்தினை உடமையில் கொண்டுள்ள நபர் ஒருவரையும் உள்ளடக்கும்;

(f) "உரிமையாளர்" என்பது, நகராட்சி அல்லது பேரூராட்சி எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதி ஒன்றினை சொந்தமாகக் கொண்டுள்ள நபர் என்று பொருள்படும் மற்றும் அத்தகைய கட்டடத்தின் குத்தகைதாரர் ஒருவரை உள்ளடக்கும்;

(g) ''கழிவுநீர்'' என்பது, கழிவுநீர்த் தொட்டி அல்லது கழிவுநீர் குளங்களில் சேர்ந்தடைந்துள்ள அல்லது அடங்கியுள்ள திரவ மற்றும் திடப்பொருள் என்று பொருள்படும்;

மையச்சட்டம் 59/1988.

(h) ''குறிப்பிடப்பட்ட வாகனம்'' என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதலுக்காக 1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் கீழ் அவ்வப்போது ஒப்புதல் அளிக்கப்படலாகும் அத்தகைய விவரக்குறிப்புகளுடன் கூடிய மோட்டார் பொருத்தப்பட்ட குழாய்களம் மற்றும் சேமிப்புத் தொட்டியுடன் பொருத்தப்பட்ட வெற்றிட சரக்குந்துகள் அல்லது அத்தகைய பிற வாகனம் என்று பொருள்படும்.

(i) ''பணியாளர்'' என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதல் மற்றும் அகற்றுதலுக்காக உரிமதாரரால் ஈடுபடுத்தப்பட்ட நபரெவரும் என்று பொருள்படும்.

**161–B. மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதலுக்கான உரிமம்.– (1)** நபரெவரும், செல்லுபடியாகும் உரிமமின்றி நகராட்சி அல்லது பேரூராட்சி எல்லைகளுக்குள் குடியிருப்பு அல்லது வணிக அல்லது நிறுவன நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் கட்டடம் எதிலுமிருந்தும் மலக்கசடு அல்லது கழிவுநீரை கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதல் கூடாது.

வரம்புரையாக, அரசின் உள்ளாட்சி அமைப்பு அல்லது சட்டப்பூர்வமான வாரியம் எதனினாலும், மலக்கசடு அல்லது கழிவுநீரைக் கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதலுக்காக அத்தகைய உரிமம் எதுவும் தேவையானதாகாது.

(2) மலக்கசடு அல்லது கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் அல்லது அகற்றுதலுக்கு கருதும் நபரெவரும், உரிமம் வழங்குவதற்காக வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விவரங்கள், ஆவணங்கள் அடங்கிய அத்தகைய படிவத்தில் மற்றும் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்று பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு உரிமத்தை வழங்கலாம் அல்லது அதற்கான காரணத்தை பதிவுசெய்து, உரிமம் வழங்குவதற்கு மறுக்கலாம்.

(4) (3) ஆம் பிரிவின் வழங்கப்பட்ட உரிமமானது, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கால அளவிற்கு செல்லுபடியாகுதல் வேண்டும்.

(5) உரிமத்தினை புதுப்பித்தலுக்கான விண்ணப்பமானது, அது முடிவடைவதற்கு முப்பது நாட்களுக்கு முன்பு, வகுத்துரைக்கப்படலாகும். அத்தகைய முறையில் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் செய்யப்படுதல் வேண்டும்.

(6) (3) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள கால வரம்பு மற்றும் செயல்முறையானது, உரிமத்தினை புதுப்பித்தலுக்கும் சமமாக பொருந்துதல் வேண்டும்.

**161–C. மலக்கசடுகள் மற்றும் கழிவு நீரை உரிமையாளரால் அல்லது அனுபவத்தில் இருப்பவரால் நீக்கப்படுதல்.–** நகராட்சி அல்லது பேரூராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதியொன்றின், நேர்விற்கேற்ப, உரிமையாளர் அல்லது அனுபவத்தில் இருப்பவர்,–

(a) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின் தேவைகளுக்கு இணங்க கழிவுநீர்த் தொட்டி அல்லது அத்தகைய அமைவிட துப்புரவு அமைப்புகளின் கட்டமைப்பினை உறுதி செய்தல் வேண்டும்;

(b) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின்படி கழிவு நீர்த் தொட்டி அல்லது அமைவிட துப்புரவு அமைப்பின் வடிவ மற்றும் இயக்குமுறை தேவைகளின்படி முறையான கசடகற்றுதலை நடத்துதல் வேண்டும்.

(c) அவரது கட்டடத்திலிருந்து மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டுசெல்லுதல் அல்லது அகற்றுதலுக்காக உரிமதாரர் ஒருவரைத் தவிர நபரெவரும் ஈடுபடுத்தப்படவில்லை அல்லது ஈடுபடுத்துமாறு செய்யப்படவில்லை என்பதை உறுதிசெய்தல் வேண்டும்;

மையச்சட்டம் 25/2013. (d) 2013 ஆம் ஆண்டு கைகளால் துப்புரவுசெய்யும் பணியாளர்களாக வேலையமர்த்தம் செய்வதைத் தடை செய்தல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வளித்தல் சட்டத்தில் தடை செய்யப்பட்டவாறான, கழிவுநீர்த் தொட்டியில் அல்லது அமைவிட துப்புரவு அமைப்பில் அபாயகரமாக சுத்தம் செய்தலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நபரெவரும் ஈடுபடவில்லை அல்லது பணியமர்த்தப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

**161–D. உரிமதாரர்களின் கடமைகள்.–** உரிமதாரர் ஒவ்வொருவரும்,–

(a) உரிமத்தில் குறிப்பிடலாகும் நேரம், வழித்தடம் மற்றும் வழங்கப்படும் இடம் தொடர்பான நெறிமுறைகளையும் வரையறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

(b) அகற்றுதல் வசதி அல்லது வெளியேற்றும் இடத்தைப் பயன்படுத்துவதற்கு வகுத்துரைக்கப்படலாகும் முறை ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய்க்கு மிகாமல் வழங்கப்படும் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

(c) மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முறையையும் பதிவு செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் ஊர்திக் குறிப்பேட்டை பராமரித்தல் மற்றும் ஓர் ஆண்டில், ஒவ்வொரு காலாண்டின் 10 ஆம் நாளுக்கு முன்னர் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(d) குறிப்பிட்ட வாகனம் வகுத்துரைக்கப்படலாகும் புவி இடங்காட்டியுடன் பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்தல் மற்றும் புவி இடங்காட்டி கருவியானது இடையூறு இல்லாமல் செயல்படுவதையும், தரவினை அனுப்புவதையும் உறுதி செய்தல் வேண்டும்.

**161-E. கசடகற்றல் செயல்முறைகளின் மேற்பார்வை மற்றும் பாதுகாப்பற்ற வெளியேற்றத்திற்கு தடை:– (1)** உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது,–

(a) மலக்கசடு அல்லது கழிவுநீரை அகற்றுதலுக்கான இடங்கள்;

(b) உரிமதாரர்களின் பட்டியல் மற்றும் அவற்றை அவ்வப்போது பதிவேற்றம் செய்தல்; மற்றும்

(c) உரிமதாரர்களுக்கு எதிராக புகார்களை பதிவு செய்தல் அல்லது விதிமீறல்களை தெரியப்படுத்துவதற்கான வழிமுறை ஆகியவற்றை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்தல் மற்றும் வலைதளம் அல்லது வலைவாயிலில் பதிவேற்றம் செய்தலும் வேண்டும்.

(2) கழிவுநீரை சிந்துதல் நிகழ்வின் தகவலினைப் பெறுவதன் பேரில், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உடனடியாக உரிமதாரர் அல்லது குறிப்பிட்ட வாகனத்தின் பொறுப்பிலுள்ள நபரை, கழிவு நீர் சிதறுதலைத் தடுக்கவும், சுற்றுச்சூழல் தாக்கத்தினை குறைக்க மற்றும் சிந்திய இடத்திலிருந்து உடனடியாக கழிவுநீர் முழுவதையும் அகற்ற பணிப்புரையிடுதல் வேண்டும்.

(3) உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது வெளியேற்றுதலுக்காக அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர பிற இடங்களில் மலக்கசடு மற்றும் கழிவுநீர் அகற்றுதலைத் தடுக்க, ஆய்வுசெய்தல் அல்லது குறிப்பிட்ட வாகனங்களில் பொறுத்தப்பட்ட புவி இடங்காட்டி போன்றவை மூலம் நகராட்சி அல்லது பேரூராட்சி எல்லைகளுக்குள் உரிமதாரர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்கு, சுகாதார ஆய்வாளரின் படிநிலைக்கு குறையாத அத்தகைய அலுவலரை நியமனம் செய்தல் வேண்டும்.

**161-F. தண்டத்தொகை.-** நபரெவரும், இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது உரிமமானது வழங்கப்படுவதற்குட்பட்ட விதிமுறைகள் நிபந்தனைகள் மற்றும் வரைக்கட்டுகளை மீறினால் அல்லது அதனுடன் இணங்கத் தவறினால் அவரின் முதல் குற்றத்திற்காக இருப்பதைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் மற்றும் இரண்டாவது அல்லது தொடர்ச்சியான குற்றங்களுக்காக ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத் தொகையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**161-G. உரிமத்தை இடைநிறுத்தம் அல்லது ரத்து செய்வதற்கான அதிகாரம்.—** (1) உரிமதாரர், உரிமத்தின் நிபந்தனைகள் மற்றும் வரைகட்டுகள் அல்லது இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் மீறினால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை இடைநீக்கம் செய்யலாம்.

(2) உரிமதாரர், இந்த அத்தியாயத்தின்படி இரண்டாவது குற்றத்திற்கான தண்டனை விதிக்கப்பட்டால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை ரத்து செய்யலாம்.

வரம்புரையாக, உரிமம் ரத்து செய்யும் ஆணையினை பிறப்பிப்பதற்கு முன்பு உரிமதாரருக்கு பதினைந்து நாட்களுக்குள் அவரது தரப்பு முறையீட்டினை செய்வதற்கான வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.

**161-H. குறிப்பிட்ட வாகனங்கள், பொருட்கள் போன்றவற்றை பறிமுதல் மற்றும் கைப்பற்றுவதற்கான அதிகாரம்.—** (1) இந்தச் சட்டத்தில் அல்லது தற்போது நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்த அத்தியாயத்தின் படியான குற்றமொன்று செய்திருக்கலாம் அல்லது செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுமிடத்தில், பேரூராட்சிகளைப் பொறுத்தவரை வட்டாட்சியரின் படிநிலைக்குக் குறையாத வருவாய்த்துறையின் அலுவலர் எவரும் மற்றும் நகராட்சிகளை பொறுத்தவரை நகராட்சி ஆணையரும் அத்தகைய குற்றம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் அல்லது மோட்டார், குழாய், குழல், கருவி அல்லது உபகரணங்கள் உள்ளடங்கலாக பிற பொருள்கள் எதையும் கைப்பற்றலாம் மற்றும் காரணமற்ற தாமதம் எதுவுமின்றி அரசால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அதனை முன்வைத்தல் வேண்டும்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அத்தகைய வாகனம் அல்லது பிற பொருள் எதுவும் முன்வைக்கப்படுமிடத்து, மற்றும் இந்த அத்தியாயத்தின் கீழ் குற்றம் ஒன்று செய்யப்பட்டுள்ளதாக அவர் மனநிறைவடைந்தால் அத்தகைய குற்றத்திற்காக வழக்கு தொடரப்பட்டாலும், இல்லாவிட்டாலும் இந்த அத்தியாயத்தின் கீழ் அக்குற்றவாளி பொறுப்பாகும் பிற தண்டனை எதற்கும் குந்தகமின்றி அவ்வாறு கைப்பற்றப்பட்ட வாகனம் அல்லது பிற பொருள்களை பறிமுதல் செய்ய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் ஆணையிடலாம்.

வரம்புரையாக, பறிமுதல் செய்வதற்கான ஆணை ஒன்றை பிறப்பிப்பதற்கு முன்பு கைப்பற்றப்பட்ட அத்தகைய வாகனம் அல்லது பொருளின் உரிமையாளர் அல்லது அவை, எவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அந்த நபருக்கு,

(a) பறிமுதல் செய்வதற்கு முன்மொழியப்பட்ட காரணங்களை அவருக்குத் தெரிவிக்கும் எழுத்து வடிவிலான அறிவிப்பு;

(b) பொருட்பாட்டில் எழுத்து வடிவிலான அவரது முறையீடு ஒன்றினை செய்வதற்கான வாய்ப்பொன்றும் கேட்பதற்கான வாய்ப்பொன்றும் வழங்கப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் (2) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்வதற்கான ஆணையை பிறப்பித்த பின்பு, பொதுநலன் கருதி அவ்வாறு செய்வது உகந்தது என்று கருதினால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் அல்லது பொருட்களை பொது ஏலத்தில் விற்பதற்கு அவர் ஆணையிடலாம்.

(4) (3) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட சொத்து எதுவும் விற்கப்படுமிடத்து மற்றும் இந்தப்பிரிவின் கீழ் செய்யப்பட்ட பறிமுதல் செய்வதற்கான ஆணையானது 161–I ஆம் பிரிவின் படியான ஆணையொன்றின் மூலம் ஒதுக்கப்படும் அல்லது ரத்து செய்யப்படுமிடத்து அத்தகைய ஏலத்தின் செலவுகளை அல்லது அதற்கான இடைநிகழ்ச் செலவுகளை கழித்த பின்பு, அத்தகைய விற்பனையின் வருமானமானது, அத்தகைய ஆணையில் குறிப்பிட்டவாறான அதன் உரிமையாளர் அல்லது பறிமுதல் செய்யப்பட்ட நபருக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

**161-I. மேல்முறையீடு.-** (1) 161–G மற்றும் 161–H பிரிவுகளின் கீழ் செய்யப்பட்ட ஆணை ஒன்றினால் பாதிக்கப்பட்ட நபரெவரும், வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில் அத்தகைய அதிகார அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பானது, மேல்முறையீட்டை தீர்மானிக்கையில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும் மற்றும் அத்தகைய மேல்முறையீடு மீதான அத்தகைய அதிகார அமைப்பின் முடிவு இறுதியானதாகும் மற்றும் சட்டமுறை நீதிமன்றம் எதிலும் கேள்வி எழுப்பப்படுதல் ஆகாது.''.

**பகுதி-IV.**

**1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

121–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

6. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடுவதற்கான) 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 121 ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் 15/1971.

''**121–A. சொத்து வரியினை உயர்த்துதல்.–** மன்றமானது, தீர்மானத்தின் மூலம் அவ்வப்போது, அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வீதங்களுக்குள், சொத்துவரியினை அத்தகைய வீதத்தில் உயர்த்தலாம்.''.

VIII–A எனும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

7. முதன்மைச் சட்டத்தின் VIII–ஆம் அத்தியாயத்திற்கு பின்பு, பின்வரும் அத்தியாயமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**''அத்தியாயம்-VIII A.**

**மலக்கசடு மற்றும் கழிவுநீர்.**

**235–A. பொருள் வரையறைகள்.–** இந்த அத்தியாயத்தின் நோக்கத்திற்காக,–

(a) ''அகற்றும் வசதி'' என்பது, வகுத்துரைக்கப்படக்கூடிய அறிவியல் பூர்வமான சுத்திகரிப்பு மற்றும் மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை அகற்றுதலுக்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்று பொருள்படும்;

(b) ''உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு'' என்பது மதுரை மாநகராட்சி ஆணையர் என்று பொருள்படும்;

(c) ''மலக்கசடு'' என்பது, செரிமானமாகாத அல்லது பாதி செரிமானமான அரைநீர்ம அல்லது அரைதிண்ம வடிவிலுள்ள, மலக்கழிவு மற்றும் சாம்பல் நீருடனான அல்லது இல்லாத கருப்புநீரின் சேர்க்கை என்று பொருள்படும்;

(d) ''உரிமதாரர்'' என்பது, இந்த அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றினை வைத்து வரும் நபரெவரும் என்று பொருள்படும்;

(e) ''அனுபவத்திலிருப்பவர்'' என்பது, மாநகராட்சி எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதி ஒன்றினை அனுபவத்திலிருக்கும் நபர் ஒருவர் என்று பொருள்படும் மற்றும் அத்தகைய கட்டடத்தினை உடமையில் கொண்டுள்ள நபர் ஒருவரையும் உள்ளடக்கும்;

(f) ''உரிமையாளர்'' என்பது, மாநகராட்சி எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதி ஒன்றினை சொந்தமாகக் கொண்டுள்ள நபர் மற்றும் அத்தகைய கட்டடத்தின் குத்தகைதாரர் ஒருவரை உள்ளடக்கும்;

(g) ''கழிவுநீர்'' என்பது, கழிவுநீர்த் தொட்டி அல்லது கழிவுநீர் குளங்களில் சேர்ந்தடைந்துள்ள அல்லது அடங்கியுள்ள திரவ மற்றும் திடப்பொருள் என்று பொருள்படும்;

(h) ''குறிப்பிடப்பட்ட வாகனம்'' என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதலுக்காக 1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் கீழ் அவ்வப்போது ஒப்புதல் அளிக்கப்படலாகும் அத்தகைய விவரக்குறிப்புகளுடன் கூடிய மோட்டார் பொருத்தப்பட்ட குழாய்களம் மற்றும் சேமிப்புத் தொட்டியுடன் பொருத்தப்பட்ட வெற்றிட சரக்குந்துகள் அல்லது அத்தகைய பிற வாகனம் என்று பொருள்படும்; மையச்சட்டம் 59/1988.

(i) ''பணியாளர்'' என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதல் மற்றும் அகற்றுதலுக்காக உரிமதாரரால் ஈடுபடுத்தப்பட்ட நபரெவரும் என்று பொருள்படும்.

**235-B. மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதலுக்கான உரிமம்.—** (1) நபரெவரும், செல்லுபடியாகும் உரிமமின்றி மாநகராட்சி எல்லைகளுக்குள் குடியிருப்பு அல்லது வணிக அல்லது நிறுவன நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் கட்டடம் எதிலுமிருந்தும் மலக்கசடு அல்லது கழிவுநீரை கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதல் கூடாது.

வரம்புரையாக, அரசின் உள்ளாட்சி அமைப்பு அல்லது சட்டப்பூர்வமான வாரியம் எதனினாலும், மலக்கசடு அல்லது கழிவுநீரைக் கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதலுக்காக அத்தகைய உரிமம் எதுவும் தேவையானதாகாது.

(2) மலக்கசடு அல்லது கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் அல்லது அகற்றுதலுக்கு கருதும் நபரெவரும், உரிமம் வழங்குவதற்காக வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விவரங்கள், ஆவணங்கள் அடங்கிய அத்தகைய படிவத்தில் மற்றும் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்று பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு உரிமத்தை வழங்கலாம் அல்லது அதற்கான காரணத்தை பதிவு செய்து, உரிமம் வழங்குவதற்கு மறுக்கலாம்.

(4) (3) ஆம் பிரிவின் வழங்கப்பட்ட உரிமமானது, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கால அளவிற்கு செல்லுபடியாகுதல் வேண்டும்.

(5) உரிமத்தினை புதுப்பித்தலுக்கான விண்ணப்பமானது, அது முடிவடைவதற்கு முப்பது நாட்களுக்கு முன்பு, வகுத்துரைக்கப்படலாகும். அத்தகைய முறையில் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் செய்யப்படுதல் வேண்டும்.

(6) (3) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள கால வரம்பு மற்றும் செயல்முறையானது, உரிமத்தினை புதுப்பித்தலுக்கும் சமமாக பொருந்துதல் வேண்டும்.

**235-C. மலக்கசடுகள் மற்றும் கழிவு நீரை உரிமையாளரால் அல்லது அனுபவத்தில் இருப்பவரால் நீக்கப்படுதல்.—** மாநகராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதியொன்றின், நேர்விற்கேற்ப, உரிமையாளர் அல்லது அனுபவத்தில் இருப்பவர்,—

(a) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின் தேவைகளுக்கு இணங்க கழிவுநீர்த்தொட்டி அல்லது அத்தகைய அமைவிட துப்புரவு அமைப்புகளின் கட்டமைப்பினை உறுதி செய்தல் வேண்டும்;

(b) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின்படி கழிவு நீர்த்தொட்டி அல்லது அமைவிட துப்புரவு அமைப்பின் வடிவ மற்றும் இயக்குமுறை தேவைகளின்படி முறையான கசடகற்றுதலை நடத்துதல் வேண்டும்.

(c) அவரது கட்டடத்திலிருந்து மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டுசெல்லுதல் அல்லது அகற்றுதலுக்காக உரிமதாரர் ஒருவரைத் தவிர நபரெவரும் ஈடுபடுத்தப்படவில்லை அல்லது ஈடுபடுத்துமாறு செய்யப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்;

மையச்சட்டம் 25/2013. (d) 2013 ஆம் ஆண்டு கைகளால் துப்புரவுசெய்யும் பணியாளர்களாக வேலையமர்த்தம் செய்வதைத் தடை செய்தல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வளித்தல் சட்டத்தில் தடை செய்யப்பட்டவாறான, கழிவுநீர்த் தொட்டியில் அல்லது அமைவிட துப்புரவு அமைப்பில் அபாயகரமாக சுத்தம் செய்தலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நபரெவரும் ஈடுபடவில்லை அல்லது பணியமர்த்தப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

**235-D. உரிமதாரர்களின் கடமைகள்.-** உரிமதாரர் ஒவ்வொருவரும்,—

(a) உரிமத்தில் குறிப்பிடலாகும் நேரம், வழித்தடம் மற்றும் வழங்கப்படும் இடம் தொடர்பான நெறிமுறைகளையும் வரையறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்;

(b) அகற்றுதல் வசதி அல்லது வெளியேற்றும் இடத்தைப் பயன்படுத்துவதற்கு வகுத்துரைக்கப்படலாகும் முறை ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய்க்கு மிகாமல் வழங்கப்படும் கட்டணம் செலுத்துதல் வேண்டும்;

(c) மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முறையையும் பதிவு செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் ஊர்திக் குறிப்பேட்டை பராமரித்தல் மற்றும் ஓர் ஆண்டில், ஒவ்வொரு காலாண்டின் 10 ஆம் நாளுக்கு முன்னர் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் சமர்ப்பித்தல் வேண்டும்;

(d) குறிப்பிட்ட வாகனம் வகுத்துரைக்கப்படலாகும் புவி இடங்காட்டியுடன் பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்தல் மற்றும் புவி இடங்காட்டி கருவியானது இடையூறு இல்லாமல் செயல்படுவதையும் தரவினை அனுப்புவதையும் உறுதி செய்தல் வேண்டும்.

**235-E. கசடகற்றல் செயல்முறைகளின் மேற்பார்வை மற்றும் பாதுகாப்பற்ற வெளியேற்றத்திற்கு தடை:—** (1) உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது,—

(a) மலக்கசடு அல்லது கழிவுநீரை அகற்றுதலுக்கான இடங்கள்;

(b) உரிமதாரர்களின் பட்டியல் மற்றும் அவற்றை அவ்வப்போது பதிவேற்றம் செய்தல்; மற்றும்

(c) உரிமதாரர்களுக்கு எதிராக புகார்களை பதிவு செய்தல் அல்லது விதிமீறல்களை தெரியப்படுத்துவதற்கான வழிமுறை ஆகியவற்றை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்தல் மற்றும் வலைதளம் அல்லது வலைவாயிலில் பதிவேற்றம் செய்தலும் வேண்டும்.

(2) கழிவுநீரை சிந்துதல் நிகழ்வின் தகவலினைப் பெறுவதன் பேரில், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உடனடியாக உரிமதாரர் அல்லது குறிப்பிட்ட வாகனத்தின் பொறுப்பிலுள்ள நபரை, கழிவு நீர் சிதறுதலை தடுக்கவும், சுற்றுச்சூழல் தாக்கத்தினை குறைக்க மற்றும் சிந்திய இடத்திலிருந்து உடனடியாக கழிவுநீர் முழுவதையும் அகற்ற பணிப்புரையிடுதல் வேண்டும்.

(3) உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது வெளியேற்றுதலுக்காக அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர பிற இடங்களில் மலக்கசடு மற்றும் கழிவுநீர் அகற்றுதலைத் தடுக்க, ஆய்வுசெய்தல் அல்லது குறிப்பிட்ட வாகனங்களில் பொறுத்தப்பட்ட புவி இடங்காட்டி போன்றவை மூலம் மாநகராட்சி எல்லைகளுக்குள் உரிமதாரர்களின் நடவடிக்கைளை மேற்பார்வையிடுவதற்கு, சுகாதார ஆய்வாளரின் படிநிலைக்கு குறையாத அத்தகைய அலுவலரை நியமனம் செய்தல் வேண்டும்.

**235-F. தண்டத்தொகை.-** நபரெவரும், இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது உரிமமானது வழங்கப்படுவதற்குட்பட்ட விதிமுறைகள் நிபந்தனைகள் மற்றும் வரைக்கட்டுகளை மீறினால் அல்லது அதனுடன் இணங்கத் தவறினால் அவரின் முதல் குற்றத்திற்காக இருப்பதைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் மற்றும் இரண்டாவது அல்லது தொடர்ச்சியான குற்றங்களுக்காக ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத் தொகையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**235-G. உரிமத்தை இடைநிறுத்தம் அல்லது ரத்து செய்வதற்கான அதிகாரம்.-** (1) உரிமதாரர், உரிமத்தின் நிபந்தனைகள் மற்றும் வரைகட்டுகள் அல்லது இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் மீறினால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை இடைநீக்கம் செய்யலாம்.

(2) உரிமதாரர், இந்த அத்தியாயத்தின்படி இரண்டாவது குற்றத்திற்கான தண்டனை விதிக்கப்பட்டால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை ரத்து செய்யலாம்.

வரம்புரையாக, உரிமம் ரத்து செய்யும் ஆணையினை பிறப்பிப்பதற்கு முன்பு உரிமதாரருக்கு பதினைந்து நாட்களுக்குள் அவரது தரப்பு முறையீட்டினை செய்வதற்கான வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.

**235-H. குறிப்பிட்ட வாகனங்கள், பொருட்கள் போன்றவற்றை பறிமுதல் மற்றும் கைப்பற்றுவதற்கான அதிகாரம்.–** (1) இந்தச் சட்டத்தில் அல்லது தற்போது நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்த அத்தியாயத்தின் படியான குற்றமொன்று செய்திருக்கலாம் அல்லது செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுமிடத்தில், மாநகராட்சியின் உதவி ஆணையாளரின் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவரும், அத்தகைய குற்றம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் அல்லது மோட்டார், குழாய், குழல், கருவி அல்லது உபகரணங்கள் உள்ளடங்கலாக பிற பொருள்கள் எதையும் கைப்பற்றலாம் மற்றும் காரணமற்ற தாமதம் எதுவுமின்றி அரசால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அதனை முன்வைத்தல் வேண்டும்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அத்தகைய வாகனம் அல்லது பிற பொருள் எதுவும் முன்வைக்கப்படுமிடத்து, மற்றும் இந்த அத்தியாயத்தின் கீழ் குற்றம் ஒன்று செய்யப்பட்டுள்ளதாக அவர் மனநிறைவடைந்தால் அத்தகைய குற்றத்திற்காக வழக்கு தொடரப்பட்டாலும், இல்லாவிட்டாலும் இந்த அத்தியாயத்தின் கீழ் அக்குற்றவாளி பொறுப்பாகும் பிற தண்டனை எதற்கும் குந்தகமின்றி அவ்வாறு கைப்பற்றப்பட்ட வாகனம் அல்லது பிற பொருள்களை பறிமுதல் செய்ய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் ஆணையிடலாம்.

வரம்புரையாக, பறிமுதல் செய்வதற்கான ஆணை ஒன்றை பிறப்பிப்பதற்கு முன்பு கைப்பற்றப்பட்ட அத்தகைய வாகனம் அல்லது பொருளின் உரிமையாளர் அல்லது அவை, எவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அந்த நபருக்கு,

(a) பறிமுதல் செய்வதற்கு முன்மொழியப்பட்ட காரணங்களை அவருக்குத் தெரிவிக்கும் எழுத்து வடிவிலான அறிவிப்பு;

(b) பொருட்பாட்டில் எழுத்து வடிவிலான அவரது முறையீடு ஒன்றினை செய்வதற்கான வாய்ப்பொன்றும் மற்றும் கேட்பதற்கான வாய்ப்பொன்றும் வழங்கப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் (2) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்வதற்கான ஆணையை பிறப்பித்த பின்பு, பொதுநலன் கருதி அவ்வாறு செய்வது உகந்தது என்று கருதினால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் அல்லது பொருட்களை பொது ஏலத்தில் விற்பதற்கு அவர் ஆணையிடலாம்.

(4) (3) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட சொத்து எதுவும் விற்கப்படுமிடத்து மற்றும் இந்தப்பிரிவின் கீழ் செய்யப்பட்ட பறிமுதல் செய்வதற்கான ஆணையானது 235–I ஆம் பிரிவின் படியான ஆணையொன்றின் மூலம் ஒதுக்கப்படும் அல்லது ரத்து செய்யப்படுமிடத்து அத்தகைய ஏலத்தின் செலவுகளை அல்லது அதற்கான இடைநிகழ்ச் செலவுகளை கழித்த பின்பு, அத்தகைய விற்பனையின் வருமானமானது, அத்தகைய ஆணையில் குறிப்பிட்டவாறான அதன் உரிமையாளர் அல்லது பறிமுதல் செய்யப்பட்ட நபருக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

**235-I. மேல்முறையீடு.–** (1) 235–G மற்றும் 235–H பிரிவுகளின் கீழ் செய்யப்பட்ட ஆணை ஒன்றினால் பாதிக்கப்பட்ட நபரெவரும், வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில் அத்தகைய அதிகார அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பானது, மேல்முறையீட்டை தீர்மானிக்கையில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும் மற்றும் அத்தகைய மேல்முறையீடு மீதான அத்தகைய அதிகார அமைப்பின் முடிவு இறுதியானதாகும் மற்றும் சட்டமுறை நீதிமன்றம் எதிலும் கேள்வி எழுப்பப்படுதல் ஆகாது.".

## பகுதி-V.

### 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

122–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

8. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடுவதற்கான) 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 122 ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் 25/1981.

"**122–A. சொத்து வரியினை உயர்த்துதல்.–** மன்றமானது, தீர்மானத்தின் மூலம் அவ்வப்போது, அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வீதங்களுக்குள், சொத்து வரியினை அத்தகைய வீதத்தில் உயர்த்தலாம்.".

VIII–A எனும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

9. முதன்மைச் சட்டத்தின் VIII–ஆம் அத்தியாயத்திற்கு பின்பு, பின்வரும் அத்தியாயமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

### "அத்தியாயம்-VIII A.

### மலக்கசடு மற்றும் கழிவுநீர்.

**235-A.பொருள் வரையறைகள்.- இந்த அத்தியாயத்தின் நோக்கத்திற்காக,–**

(a) "அகற்றும் வசதி" என்பது, வகுத்துரைக்கப்படக்கூடிய அறிவியல் பூர்வமான சுத்திகரிப்பு மற்றும் மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை அகற்றுதலுக்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்று பொருள்படும்;

(b) "உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு" என்பது கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் என்று பொருள்படும்;

(c) "மலக்கசடு" என்பது, செரிமானமாகாத அல்லது பாதி செரிமானமான அரைநீர்ம அல்லது அரைதிண்ம வடிவிலுள்ள, மலக்கழிவு மற்றும் சாம்பல் நீருடனான அல்லது இல்லாத கருப்புநீரின் சேர்க்கை என்று பொருள்படும்;

(d) "உரிமதாரர்" என்பது, இந்த அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றினை வைத்து வரும் நபரெவரும் என்று பொருள்படும்;

(e) "அனுபவத்திலிருப்பவர்" என்பது, மாநகராட்சி எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதி ஒன்றினை அனுபவத்திலிருக்கும் நபர் ஒருவர் என்று பொருள்படும் மற்றும் அத்தகைய கட்டடத்தினை உடைமையில் கொண்டுள்ள நபர் ஒருவரையும் உள்ளடக்கும்;

(f) "உரிமையாளர்" என்பது, மாநகராட்சி எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதி ஒன்றினை சொந்தமாகக் கொண்டுள்ள நபர் மற்றும் அத்தகைய கட்டடத்தின் குத்தகைதாரர் ஒருவரை உள்ளடக்கும்;

(g) "கழிவுநீர்" என்பது, கழிவுநீர்த் தொட்டி அல்லது கழிவுநீர் குளங்களில் சேர்ந்தடைந்துள்ள அல்லது அடங்கியுள்ள திரவ மற்றும் திடப்பொருள் என்று பொருள்படும்;

(h) "குறிப்பிடப்பட்ட வாகனம்" என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதலுக்காக 1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் கீழ் அவ்வப்போது ஒப்புதல் அளிக்கப்படலாகும் அத்தகைய விவரக்குறிப்புகளுடன் கூடிய மோட்டார் பொருத்தப்பட்ட குழாய்களம் மற்றும் சேமிப்புத் தொட்டியுடன் பொருத்தப்பட்ட வெற்றிட சரக்குந்துகள் அல்லது அத்தகைய பிற வாகனம் என்று பொருள்படும்; மையச்சட்டம் 59/1988

(i) "பணியாளர்" என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதல் மற்றும் அகற்றுதலுக்காக உரிமதாரரால் ஈடுபடுத்தப்பட்ட நபரெவரும் என்று பொருள்படும்.

**235-B. மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதலுக்கான உரிமம்.-** (1) நபரெவரும், செல்லுபடியாகும் உரிமமின்றி மாநகராட்சி எல்லைகளுக்குள் குடியிருப்பு அல்லது வணிக அல்லது நிறுவன நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் கட்டடம் எதிலுமிருந்தும் மலக்கசடு அல்லது கழிவுநீரை கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதல் கூடாது.

வரம்புரையாக, அரசின் உள்ளாட்சி அமைப்பு அல்லது சட்டப்பூர்வமான வாரியம் எதனினாலும், மலக்கசடு அல்லது கழிவுநீரைக் கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதலுக்காக அத்தகைய உரிமம் எதுவும் தேவையானதாகாது.

(2) மலக்கசடு அல்லது கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் அல்லது அகற்றுதலுக்கு கருதும் நபரெவரும், உரிமம் வழங்குவதற்காக வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விவரங்கள், ஆவணங்கள் அடங்கிய அத்தகைய படிவத்தில் மற்றும் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்று பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு உரிமத்தை வழங்கலாம் அல்லது அதற்கான காரணத்தை பதிவு செய்து, உரிமம் வழங்குவதற்கு மறுக்கலாம்.

(4) (3) ஆம் பிரிவின் வழங்கப்பட்ட உரிமமானது, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கால அளவிற்கு செல்லுபடியாகுதல் வேண்டும்.

(5) உரிமத்தினை புதுப்பித்தலுக்கான விண்ணப்பமானது, அது முடிவடைவதற்கு முப்பது நாட்களுக்கு முன்பு, வகுத்துரைக்கப்படலாகும். அத்தகைய முறையில் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் செய்யப்படுதல் வேண்டும்.

6) (3) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள கால வரம்பு மற்றும் செயல்முறையானது, உரிமத்தினை புதுப்பித்தலுக்கும் சமமாக பொருந்துதல் வேண்டும்.

**235-C. மலக்கசடுகள் மற்றும் கழிவு நீரை உரிமையாளரால் அல்லது அனுபவத்தில் இருப்பவரால் நீக்கப்படுதல்.-** மாநகராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதியொன்றின், நேர்விற்கேற்ப, உரிமையாளர் அல்லது அனுபவத்தில் இருப்பவர்,—

(a) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின் தேவைகளுக்கு இணங்க கழிவுநீர்த் தொட்டி அல்லது அத்தகைய அமைவிட துப்புரவு அமைப்புகளின் கட்டமைப்பினை உறுதி செய்தல் வேண்டும்;

(b) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின்படி கழிவு நீர்த்தொட்டி அல்லது அமைவிட துப்புரவு அமைப்பின் வடிவ மற்றும் இயக்குமுறை தேவைகளின்படி முறையான கசடகற்றுதலை நடத்துதல் வேண்டும்.

(c) அவரது கட்டடத்திலிருந்து மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டுசெல்லுதல் அல்லது அகற்றுதலுக்காக உரிமதாரர் ஒருவரைத் தவிர நபரெவரும் ஈடுபடுத்தப்படவில்லை அல்லது ஈடுபடுத்துமாறு செய்யப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்;

மையச்சட்டம் 25/2013. (d) 2013 ஆம் ஆண்டு கைகளால் துப்புரவுசெய்யும் பணியாளர்களாக வேலையமர்த்தம் செய்வதைத் தடை செய்தல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வளித்தல் சட்டத்தில் தடை செய்யப்பட்டவாறான, கழிவுநீர்த் தொட்டியில் அல்லது அமைவிட துப்புரவு அமைப்பில் அபாயகரமாக சுத்தம் செய்தலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நபரெவரும் ஈடுபடவில்லை அல்லது பணியமர்த்தப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

**235-D. உரிமதாரர்களின் கடமைகள்.-** உரிமதாரர் ஒவ்வொருவரும்,—

(a) உரிமத்தில் குறிப்பிடலாகும் நேரம், வழித்தடம் மற்றும் வழங்கப்படும் இடம் தொடர்பான நெறிமுறைகளையும் வரையறைகளையும் பின்பற்றுதல்;

(b) அகற்றுதல் வசதி அல்லது வெளியேற்றும் இடத்தைப் பயன்படுத்துவதற்கு வகுத்துரைக்கப்படலாகும் முறை ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய்க்கு மிகாமல் வழங்கப்படும் கட்டணம் செலுத்துதல் வேண்டும்;

(c) மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முறையையும் பதிவு செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் ஊர்திக் குறிப்பேட்டை பராமரித்தல் மற்றும் ஓர் ஆண்டில், ஒவ்வொரு காலாண்டின் 10 ஆம் நாளுக்கு முன்னர் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(d) குறிப்பிட்ட வாகனம் வகுத்துரைக்கப்படலாகும் புவி இடங்காட்டியுடன் பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்தல் மற்றும் புவி இடங்காட்டி கருவியானது இடையூறு இல்லாமல் செயல்படுவதையும், தரவினை அனுப்புவதையும் உறுதி செய்தல் வேண்டும்.

**235-E. கசடகற்றல் செயல்முறைகளின் மேற்பார்வை மற்றும் பாதுகாப்பற்ற வெளியேற்றத்திற்கு தடை:–** (1) உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது,–

(a) மலக்கசடு அல்லது கழிவுநீரை அகற்றுதலுக்கான இடங்கள்;

(b) உரிமதாரர்களின் பட்டியல் மற்றும் அவற்றை அவ்வப்போது பதிவேற்றம் செய்தல்; மற்றும்

(c) உரிமதாரர்களுக்கு எதிராக புகார்களை பதிவு செய்தல் அல்லது விதிமீறல்களை தெரியப்படுத்துவதற்கான வழிமுறை ஆகியவற்றை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்தல் மற்றும் வலைதளம் அல்லது வலைவாயிலில் பதிவேற்றம் செய்தலும் வேண்டும்.

(2) கழிவுநீரை சிந்துதல் நிகழ்வின் தகவலினைப் பெறுவதன் பேரில், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உடனடியாக உரிமதாரர் அல்லது குறிப்பிட்ட வாகனத்தின் பொறுப்பிலுள்ள நபரை, கழிவு நீர் சிதறுதலை தடுக்கவும், சுற்றுச்சூழல் தாக்கத்தினை குறைக்க மற்றும் சிந்திய இடத்திலிருந்து உடனடியாக கழிவுநீர் முழுவதையும் அகற்ற பணிப்புரையிடுதல் வேண்டும்.

(3) உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது வெளியேற்றுதலுக்காக அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர பிற இடங்களில் மலக்கசடு மற்றும் கழிவுநீர் அகற்றுதலைத் தடுக்க, ஆய்வுசெய்தல் அல்லது குறிப்பிட்ட வாகனங்களில் பொருத்தப்பட்ட புவி இடங்காட்டி போன்றவை மூலம் மாநகராட்சி எல்லைகளுக்குள் உரிமதாரர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்கு, சுகாதார ஆய்வாளரின் படிநிலைக்கு குறையாத அத்தகைய அலுவலரை நியமனம் செய்தல் வேண்டும்.

**235-F. தண்டத்தொகை.-** நபரெவரும், இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது உரிமமானது வழங்கப்படுவதற்குட்பட்ட விதிமுறைகள் நிபந்தனைகள் மற்றும் வரைக்கட்டுகளை மீறினால் அல்லது அதனுடன் இணங்கத் தவறினால் அவரின் முதல் குற்றத்திற்காக இருப்பதைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் மற்றும் இரண்டாவது அல்லது தொடர்ச்சியான குற்றங்களுக்காக ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத் தொகையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**235-G. உரிமத்தை இடைநிறுத்தம் அல்லது ரத்து செய்வதற்கான அதிகாரம்.-** (1) உரிமதாரர், உரிமத்தின் நிபந்தனைகள் மற்றும் வரைகட்டுகள் அல்லது இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் மீறினால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை இடைநீக்கம் செய்யலாம்.

(2) உரிமதாரர், இந்த அத்தியாயத்தின்படி இரண்டாவது குற்றத்திற்கான தண்டனை விதிக்கப்பட்டால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை ரத்து செய்யலாம்.

வரம்புரையாக, உரிமம் ரத்து செய்யும் ஆணைபிறப்பிப்பதற்கு முன்பு உரிமதாரருக்கு பதினைந்து நாட்களுக்குள் அவரது தரப்பு முறையீட்டினை செய்வதற்கான வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.

**235-H. குறிப்பிட்ட வாகனங்கள், பொருட்கள் போன்றவற்றை பறிமுதல் மற்றும் கைப்பற்றுவதற்கான அதிகாரம்.-** (1) இந்தச் சட்டத்தில் அல்லது தற்போது நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்த அத்தியாயத்தின் படியான குற்றமொன்று செய்திருக்கலாம் அல்லது செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுமிடத்தில், மாநகராட்சியின் உதவி ஆணையாளரின் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவரும், அத்தகைய குற்றம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் அல்லது மோட்டார், குழாய், குழல், கருவி அல்லது உபகரணங்கள் உள்ளடங்கலாக பிற பொருள்கள் எதையும் கைப்பற்றலாம் மற்றும் காரணமற்ற தாமதம் எதுவுமின்றி அரசால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அதனை முன்வைத்தல் வேண்டும்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அத்தகைய வாகனம் அல்லது பிற பொருள் எதுவும் முன்வைக்கப்படுமிடத்து, மற்றும் இந்த அத்தியாயத்தின் கீழ் குற்றம் ஒன்று செய்யப்பட்டுள்ளதாக அவர் மனநிறைவடைந்தால் அத்தகைய குற்றத்திற்காக வழக்கு தொடரப்பட்டாலும், இல்லாவிட்டாலும் இந்த அத்தியாயத்தின் கீழ் அக்குற்றவாளி பொறுப்பாகும் பிற தண்டனை எதற்கும் குந்தகமின்றி அவ்வாறு கைப்பற்றப்பட்ட வாகனம் அல்லது பிற பொருள்களை பறிமுதல் செய்ய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் ஆணையிடலாம்.

வரம்புரையாக, பறிமுதல் செய்வதற்கான ஆணை ஒன்றை பிறப்பிப்பதற்கு முன்பு கைப்பற்றப்பட்ட அத்தகைய வாகனம் அல்லது பொருளின் உரிமையாளர் அல்லது அவை, எவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அந்த நபருக்கு

(a) பறிமுதல் செய்வதற்கு முன்மொழியப்பட்ட காரணங்களை அவருக்குத் தெரிவிக்கும் எழுத்து வடிவிலான அறிவிப்பு;

(b) பொருட்பாட்டில் எழுத்து வடிவிலான அவரது முறையீடு ஒன்றினை செய்வதற்கான வாய்ப்பொன்றும் மற்றும் கேட்பதற்கான வாய்ப்பொன்றும் வழங்கப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர், (2) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்வதற்கான ஆணையை பிறப்பித்த பின்பு, பொதுநலன் கருதி அவ்வாறு செய்வது உகந்தது என்று கருதினால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் அல்லது பொருட்களை பொது ஏலத்தில் விற்பதற்கு அவர் ஆணையிடலாம்.

(4) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட சொத்து எதுவும் விற்கப்படுமிடத்து மற்றும் இந்தப்பிரிவின் கீழ் செய்யப்பட்ட பறிமுதல் செய்வதற்கான ஆணையானது 235–I ஆம் பிரிவின் படியான ஆணையொன்றின் மூலம் ஒதுக்கப்படும் அல்லது ரத்து செய்யப்படுமிடத்து அத்தகைய ஏலத்தின் செலவுகளை அல்லது அதற்கான இடைநிகழ்ச் செலவுகளை கழித்த பின்பு, அத்தகைய விற்பனையின் வருமானமானது, அத்தகைய ஆணையில் குறிப்பிட்டவாறான அதன் உரிமையாளர் அல்லது பறிமுதல் செய்யப்பட்ட நபருக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

**235-I. மேல்முறையீடு.-** (1) 235–G மற்றும் 235–H பிரிவுகளின் கீழ் செய்யப்பட்ட ஆணை ஒன்றினால் பாதிக்கப்பட்ட நபரெவரும், வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில் அத்தகைய அதிகார அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பானது, மேல்முறையீட்டை தீர்மானிக்கையில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும் மற்றும் அத்தகைய மேல்முறையீடு மீதான அத்தகைய அதிகார அமைப்பின் முடிவு இறுதியானதாகும் மற்றும் சட்டமுறை நீதிமன்றம் எதிலும் கேள்வி எழுப்பப்படுதல் ஆகாது.''.

## பகுதி-VI.

### 1978 ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 28/1978.

**10.** 1978 ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சட்டத்தின் VI ஆம் அத்தியாயத்திற்குப் பின்பு, பின்வரும் அத்தியாயமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– VI–A எனும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

**"அத்தியாயம்-VI A.**

**மலக்கசடு மற்றும் கழிவுநீர்.**

**69-A. பொருள் வரையறைகள்.-** இந்த அத்தியாயத்தின் நோக்கத்திற்காக,–

(a) ''அகற்றும் வசதி'' என்பது, வகுத்துரைக்கப்படக்கூடிய அறிவியல் பூர்வமான சுத்திகரிப்பு மற்றும் மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை அகற்றுதலுக்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்று பொருள்படும்;

(b) ''உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு'' என்பது மேலாண்மை இயக்குநர் என்று பொருள்படும்;

(c) ‘‘மலக்கசடு’’ என்பது, செரிமானமாகாத அல்லது பாதி செரிமானமான அரைநீர்ம அல்லது அரைதிண்ம வடிவிலுள்ள, மலக்கழிவு மற்றும் சாம்பல் நீருடனான அல்லது இல்லாத கருப்புநீரின் சேர்க்கை என்று பொருள்படும்;

(d) ‘‘உரிமதாரர்’’ என்பது, இந்த அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றினை வைத்து வரும் நபரெவரும் என்று பொருள்படும்;

(e) ‘‘கழிவுநீர்’’ என்பது, கழிவுநீர்த் தொட்டி அல்லது கழிவுநீர் குளங்களில் சேர்ந்தடைந்துள்ள அல்லது அடங்கியுள்ள திரவ மற்றும் திடப்பொருள் என்று பொருள்படும்;

மையச்சட்டம் 59/1988.

(f) ‘‘குறிப்பிடப்பட்ட வாகனம்’’ என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதலுக்காக 1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் கீழ் அவ்வப்போது ஒப்புதலலிக்கப்படலாகும் அத்தகைய விவரக்குறிப்புகளுடன் கூடிய மோட்டார் பொருத்தப்பட்ட குழாய்களம் மற்றும் சேமிப்புத் தொட்டியுடன் பொருத்தப்பட்ட வெற்றிட சரக்குந்துகள் அல்லது அத்தகைய பிற வாகனம் என்று பொருள்படும்;

(g) ‘‘பணியாளர்’’ என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதல் மற்றும் அகற்றுதலுக்காக உரிமதாரரால் ஈடுபடுத்தப்பட்ட நபரெவரும் என்று பொருள்படும்;

**69-B. மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதலுக்கான உரிமம்.–** (1) நபரெவரும், செல்லுபடியாகும் உரிமமின்றி சென்னை பெருநகர் பகுதிக்குள் குடியிருப்பு அல்லது வணிக அல்லது நிறுவன நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் கட்டடம் எதிலுமிருந்தும் மலக்கசடு அல்லது கழிவுநீரை கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதல் கூடாது.

வரம்புரையாக, அரசின் உள்ளாட்சி அமைப்பு அல்லது சட்டப்பூர்வமான வாரியம் எதனினாலும், மலக்கசடு அல்லது கழிவுநீரைக் கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதலுக்காக அத்தகைய உரிமம் எதுவும் தேவையானதாகாது.

(2) மலக்கசடு அல்லது கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் அல்லது அகற்றுதலுக்கு கருதும் நபரெவரும், உரிமம் வழங்குவதற்காக வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விவரங்கள், ஆவணங்கள் அடங்கிய அத்தகைய படிவத்தில் மற்றும் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்று பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு உரிமத்தை வழங்கலாம் அல்லது அதற்கான காரணத்தை பதிவு செய்து, உரிமம் வழங்குவதற்கு மறுக்கலாம்.

(4) (3) ஆம் பிரிவின் வழங்கப்பட்ட உரிமமானது, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கால அளவிற்கு செல்லுபடியாகுதல் வேண்டும்.

(5) உரிமத்தினை புதுப்பித்தலுக்கான விண்ணப்பமானது, அது முடிவடைவதற்கு முப்பது நாட்களுக்கு முன்பு, வகுத்துரைக்கப்படலாகும். அத்தகைய முறையில் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் செய்யப்படுதல் வேண்டும்.

(6) (3) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள கால வரம்பு மற்றும் செயல்முறையானது, உரிமத்தினை புதுப்பித்தலுக்கும் சமமாக பொருந்துதல் வேண்டும்.

**69-C. மலக்கசடுகள் மற்றும் கழிவு நீரை உரிமையாளரால் அல்லது அனுபவத்தில் இருப்பவரால் நீக்கப்படுதல்.-** சென்னை பெருநகர் பகுதிக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதியொன்றின், நேர்விற்கேற்ப, உரிமையாளர் அல்லது அனுபவத்தில் இருப்பவர்,–

(a) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின் தேவைகளுக்கு இணங்க கழிவுநீர் தொட்டி அல்லது அத்தகைய அமைவிட துப்புரவு அமைப்புகளின் கட்டமைப்பினை உறுதி செய்தல் வேண்டும்;

(b) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின்படி கழிவு நீர் தொட்டி அல்லது அமைவிட துப்புரவு அமைப்பின் வடிவ மற்றும் இயக்குமுறை தேவைகளின்படி முறையான கசடகற்றுதலை நடத்துதல் வேண்டும்.

(c) அவரது கட்டடத்திலிருந்து மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டுசெல்லுதல் அல்லது அகற்றுதலுக்காக உரிமதாரர் ஒருவரைத் தவிர நபரெவரும் ஈடுபடுத்தப்படவில்லை அல்லது ஈடுபடுத்துமாறு செய்யப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்;

மையச்சட்டம் 25/2013. (d) 2013 ஆம் ஆண்டு கைகளால் துப்புரவுசெய்யும் பணியாளர்களாக வேலையமர்த்தம் செய்வதைத் தடை செய்தல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வளித்தல் சட்டத்தில் தடை செய்யப்பட்டவாறான கழிவுநீர்த் தொட்டியில் அல்லது அமைவிட துப்புரவு அமைப்பில் அபாயகரமாக சுத்தம் செய்தலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நபரெவரும் ஈடுபடவில்லை அல்லது பணியமர்த்தப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்;

**69-D. உரிமதாரர்களின் கடமைகள்.-** உரிமதாரர் ஒவ்வொருவரும்,—

(a) உரிமத்தில் குறிப்பிடலாகும் நேரம், வழித்தடம் மற்றும் வழங்கப்படும் இடம் தொடர்பான நெறிமுறைகளையும் வரையறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்;

(b) அகற்றுதல் வசதி அல்லது வெளியேற்றும் இடத்தைப் பயன்படுத்துவதற்கு வகுத்துரைக்கப்படலாகும் முறை ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய்க்கு மிகாமல் வழங்கப்படும் கட்டணம் செலுத்துதல் வேண்டும்;

(c) மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முறையையும் பதிவு செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் ஊர்திக் குறிப்பேட்டை பராமரித்தல் மற்றும் ஓர் ஆண்டில், ஒவ்வொரு காலாண்டின் 10 ஆம் நாளுக்கு முன்னர் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் சமர்ப்பித்தல் வேண்டும்;

(d) குறிப்பிட்ட வாகனம் வகுத்துரைக்கப்படலாகும் புவி இடங்காட்டியுடன் பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்தல் மற்றும் புவி இடங்காட்டி கருவியானது இடையூறு இல்லாமல் செயல்படுவதையும், தரவினை அனுப்புவதையும் உறுதி செய்தல் வேண்டும்.

**69-E. கசடகற்றல் செயல்முறைகளின் மேற்பார்வை மற்றும் பாதுகாப்பற்ற வெளியேற்றத்திற்கு தடை.—** (1) உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது,—

(a) மலக்கசடு அல்லது கழிவுநீரை அகற்றுதலுக்கான இடங்கள்;

(b) உரிமதாரர்களின் பட்டியல் மற்றும் அவற்றை அவ்வப்போது பதிவேற்றம் செய்தல்; மற்றும்

(c) உரிமதாரர்களுக்கு எதிராக புகார்களை பதிவு செய்தல் அல்லது விதிமீறல்களை தெரியப்படுத்துவதற்கான வழிமுறை ஆகியவற்றை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்தல் மற்றும் வலைதளம் அல்லது வலைவாயிலில் பதிவேற்றம் செய்தலும் வேண்டும்.

(2) கழிவுநீரை சிந்துதல் நிகழ்வின் தகவலினைப் பெறுவதன் பேரில், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உடனடியாக உரிமதாரர் அல்லது குறிப்பிட்ட வாகனத்தின் பொறுப்பிலுள்ள நபரை, கழிவுநீர் சிதறுதலை தடுக்கவும், சுற்றுச்சூழல் தாக்கத்தினை குறைக்க மற்றும் சிந்திய இடத்திலிருந்து உடனடியாக கழிவுநீர் முழுவதையும் அகற்ற பணிப்புரையிடுதல் வேண்டும்.

(3) உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது வெளியேற்றுதலுக்காக அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர பிற இடங்களில் மலக்கசடு மற்றும் கழிவுநீர் அகற்றுதலைத் தடுக்க, ஆய்வுசெய்தல் அல்லது குறிப்பிட்ட வாகனங்களில் பொறுத்தப்பட்ட புவி இடங்காட்டி போன்றவை மூலம் சென்னை பெருநகர் பகுதிக்குள் உரிமதாரர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்கு, சுகாதார ஆய்வாளரின் படிநிலைக்கு குறையாத அத்தகைய அலுவலரை நியமனம் செய்தல் வேண்டும்.

**69-F. தண்டத்தொகை.-** நபரெவரும் இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது உரிமமானது வழங்கப்படுவதற்குட்பட்ட விதிமுறைகள் நிபந்தனைகள் மற்றும் வரைக்கட்டுகளை மீறினால் அல்லது அதனுடன் இணங்கத் தவறினால் அவரின் முதல் குற்றத்திற்காக இருப்பதைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் மற்றும் இரண்டாவது அல்லது தொடர்ச்சியான குற்றங்களுக்காக ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத் தொகையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**69-G. உரிமத்தை இடைநிறுத்தம் அல்லது ரத்து செய்வதற்கான அதிகாரம்.-** (1) உரிமதாரர், உரிமத்தின் நிபந்தனைகள் மற்றும் வரைகட்டுகள் அல்லது இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் மீறினால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை இடைநீக்கம் செய்யலாம்.

(2) உரிமதாரர், இந்த அத்தியாயத்தின்படி இரண்டாவது குற்றத்திற்கான தண்டனை விதிக்கப்பட்டால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை ரத்து செய்யலாம்.

வரம்புரையாக, உரிமம் ரத்து செய்யும் ஆணையினை பிறப்பிப்பதற்கு முன்பு உரிமதாரருக்கு பதினைந்து நாட்களுக்குள் அவரது தரப்பு முறையீட்டினை செய்வதற்கான வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.

**69-H. குறிப்பிட்ட வாகனங்கள், பொருட்கள் போன்றவற்றை பறிமுதல் மற்றும் கைப்பற்றுவதற்கான அதிகாரம்.-** (1) இந்தச் சட்டத்தில் அல்லது தற்போது நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்த அத்தியாயத்தின் படியான குற்றமொன்று செய்திருக்கலாம் அல்லது செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுமிடத்தில், வாரியத்தின் செயற்பொறியாளரின் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவரும், அத்தகைய குற்றம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் அல்லது மோட்டார், குழாய், குழல், கருவி அல்லது உபகரணங்கள் உள்ளடங்கலாக பிற பொருள்கள் எதையும் கைப்பற்றலாம் மற்றும் காரணமற்ற தாமதம் எதுவுமின்றி அரசால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அதனை முன்வைத்தல் வேண்டும்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அத்தகைய வாகனம் அல்லது பிற பொருள் எதுவும் முன்வைக்கப்படுமிடத்து, மற்றும் இந்த அத்தியாயத்தின் கீழ் குற்றம் ஒன்று செய்யப்பட்டுள்ளதாக அவர் மனநிறைவடைந்தால் அத்தகைய குற்றத்திற்காக வழக்கு தொடரப்பட்டாலும், இல்லாவிட்டாலும் இந்த அத்தியாயத்தின் கீழ் அக்குற்றவாளி பொறுப்பாகும் பிற தண்டனை எதற்கும் குந்தகமின்றி அவ்வாறு கைப்பற்றப்பட்ட வாகனம் அல்லது பிற பொருள்களை பறிமுதல் செய்ய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் ஆணையிடலாம்.

வரம்புரையாக, பறிமுதல் செய்வதற்கான ஆணையம் ஒன்றை பிறப்பிப்பதற்கு முன்பு கைப்பற்றப்பட்ட அத்தகைய வாகனம் அல்லது பொருளின் உரிமையாளர் அல்லது அவை, எவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அந்த நபருக்கு,

(a) பறிமுதல் செய்வதற்கு முன்மொழியப்பட்ட காரணங்களை அவருக்குத் தெரிவிக்கும் எழுத்து வடிவிலான அறிவிப்பு;

(b) பொருட்பாட்டில் எழுத்து வடிவிலான அவரது முறையீடு ஒன்றினை செய்வதற்கான வாய்ப்பொன்றும் மற்றும் கேட்பதற்கான வாய்ப்பொன்றும் வழங்கப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் (2) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்வதற்கான ஆணையை பிறப்பித்த பின்பு, பொதுநலன் கருதி அவ்வாறு செய்வது உகந்தது என்று கருதினால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் அல்லது பொருட்களை பொது ஏலத்தில் விற்பதற்கு அவர் ஆணையிடலாம்.

(4) (3) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட சொத்து எதுவும் விற்கப்படுமிடத்து மற்றும் இந்தப்பிரிவின் கீழ் செய்யப்பட்ட பறிமுதல் செய்வதற்கான ஆணையானது 69–I ஆம் பிரிவின் படியான ஆணையொன்றின் மூலம் ஒதுக்கப்படும் அல்லது ரத்து செய்யப்படுமிடத்து அத்தகைய ஏலத்தின் செலவுகளை அல்லது அதற்கான இடைநிகழ்ச் செலவுகளை கழித்த பின்பு, அத்தகைய விற்பனையின் வருமானமானது, அத்தகைய ஆணையில் குறிப்பிட்டவாறான அதன் உரிமையாளர் அல்லது பறிமுதல் செய்யப்பட்ட நபருக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

**69-I. மேல்முறையீடு.-** (1) 69–G மற்றும் 69–H பிரிவுகளின் கீழ் செய்யப்பட்ட ஆணை ஒன்றினால் பாதிக்கப்பட்ட நபரெவரும், வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில் அத்தகைய அதிகார அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பானது, மேல்முறையீட்டை தீர்மானிக்கையில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும் மற்றும் அத்தகைய மேல்முறையீடு மீதான அத்தகைய அதிகார அமைப்பின் முடிவு இறுதியானதாகும் மற்றும் சட்டமுறை நீதிமன்றம் எதிலும் கேள்வி எழுப்பப்படுதல் ஆகாது.".

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசுச் செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2022 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத்தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது.

**சட்ட எண். 38/2022.**

**1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) (i) 6 ஆம் பிரிவானது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்; மற்றும்

(ii) இந்தச் சட்டத்தின் எஞ்சியுள்ள வகைமுறைகள் அனைத்தும் அரசு அறிவிக்கையின் வாயிலாக குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 35/1972

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடுவதான) 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில்,–

(1) (30) ஆம் கூறில், ''அல்லது புதிய நகரத்திற்கான ஒரு இடம்'' எனும் சொற்றொடருக்கு பின்பு, ''அல்லது சென்னை பெருநகர திட்டப் பகுதி அல்லது நகர்ப்புர திட்டப் பகுதி எதுவும்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்;

(2) (31) ஆம் கூறுக்கு பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(31–a) 'வகுத்துரைக்கப்பட்ட' என்பது இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்.'' ;

(3) (46) ஆம் கூறுக்கு பின்பு, பின்வரும் கூறுகளானவை சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(47) 'நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்' என்பது 9–F ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம் என்று பொருள்படும்;

(48) ''நகர்ப்புர திட்டப் பகுதி'' என்பது அரசானது, ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிக்கையினால், அவ்வப்போது குறித்திடலாகும் நகர்ப்புரப்பகுதி எதுவும் என்று பொருள்படும்.''.

9–D ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 9–D ஆம் பிரிவில், (18) ஆம் கூறில், (b) உட்கூறுக்காக, பின்வரும் உட்கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(b) (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

(1) 49 ஆம் பிரிவு அல்லது 54 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் முடிவு அல்லது ஆணை எதனாலும் பாதிக்கப்பட்ட நபர் எவரும் அரசிடம் மேல்முறையீடு செய்யலாம்.''.

II–B எனும் புது அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

**4.** முதன்மைச் சட்டத்தின் அத்தியாயம் II–A–க்குப் பின்பு, பின்வரும் அத்தியாயமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**''அத்தியாயம்—II–B.**

**நகர்ப்புர திட்டப் பகுதிக்கான நகர்ப்புர வளர்ச்சிக் குழுமத்தின் அமைத்துருவாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு மற்றும் அது தொடர்பான சிறப்பு வகைமுறைகள்.**

நகர்ப்புர வளர்ச்சிக் குழுமத்தை நிறுவுதல்.

**9–F.** (1) ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிக்கை வாயிலாக அரசானது, இதன்பொருட்டு குறித்திடலாகும் அத்தகைய தேதி முதற்கொண்டு அதில் குறித்திடலாகும் பெயரால், நகர்ப்புர திட்டப் பகுதி எதற்கும் குழுமம் ஒன்று நிறுவப்படுதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நகர்ப்புர வளர்ச்சிக் குழுமமானது, பின்வரும் நபர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) அரசால் நியமிக்கப்பட்ட எட்டு நபர்களில்—

(i) ஒருவர் தலைவராக இருத்தல் வேண்டும்;

(ii) ஒருவர் துணைத் தலைவராக இருத்தல் வேண்டும்;

(iii) மூவர் அரசு அலுவலர்களாக இருத்தல் வேண்டும்;

(iv) ஒருவர் மாநிலச் சட்டமன்ற உறுப்பினராக இருத்தல் வேண்டும்;

(v) ஒருவர் நகர்ப்புர திட்டப் பகுதியில் வர்த்தகம் மற்றும் தொழில் துறையின் சார்பாளராக இருத்தல் வேண்டும்; மற்றும்

(vi) ஒருவர் உறுப்பினர்—செயலாளராக இருத்தல் வேண்டும்.

(b) இயக்குநர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்;

(c) நகர்ப்புர வளர்ச்சிக் குழுமத்தின் தலைமை திட்டமிடலாளர்;

(d) நகர்ப்புர திட்டப் பகுதியின் மாநகராட்சி ஆணையர்;

(e) கீழே குறிப்பிடப்பட்டுள்ள உள்ளாட்சி அதிகார அமைப்பின் பிரதிநிதிகள்:—

(i) நகர்ப்புர திட்டப் பகுதியில் செயல்படும் உள்ளாட்சிக் குழுமம், ஒன்று மட்டுமே இருப்பின், உள்ளாட்சி அதிகார அமைப்பால் நியமிக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகள்:

(ii) நகர்ப்புர திட்டப் பகுதியில், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உள்ளாட்சி அதிகார அமைப்புகள் செயல்பட்டால், அத்தகைய உள்ளாட்சி அதிகார அமைப்புகளின் உறுப்பினர்களாக இருக்கும், அரசால் அமர்த்தப்படும், நான்கிற்கும் மிகாத அத்தகைய நபர்கள்.

நகர்ப்புர வளர்ச்சிக் குழுமத்தினை ஒருங்கிணைத்தல்.

9—G. நகர்ப்புர வளர்ச்சிக் குழுமமானது, ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும் மற்றும் தொடர்ந்திருக்கும் வழியுரிமை மற்றும் பொது இலச்சினையையும் பெற்றிருத்தல் வேண்டும், மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் அல்லது பிற சட்டம் எதிலும், விதிக்கப்படலாகும் அத்தகைய வரையறைக்கு அல்லது தகுதிக்கு உட்பட்டு, அதன் கூட்டமைப்பின் பெயரில் வழக்கிடலாம் அல்லது வழக்கிடப்படலாம் அல்லது அசையும் அல்லது அசையா சொத்துக்களை ஈட்டலாம், வைத்திருக்கலாம் அல்லது அதற்கு வகை செய்யலாம், அல்லது ஒப்பந்தங்களை நிறைவேற்றலாம் மற்றும் அதன் அமைத்துருவாக்கத்தின் நோக்கத்திற்காக, தேவையான, முறையான அல்லது உகந்ததான அனைத்து பொருட்கூறுகளையும் செய்யலாம்.

நகர்ப்புர வளர்ச்சிக் குழுமத்தின் செயற்பணிகளும் அதிகாரங்களும்

9—H. (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளுக்குட்பட்டு, ஒரு நகர்ப்புர வளர்ச்சிக் குழுமத்தின் செயற்பணிகளானவை—

(i) நகர்ப்புர திட்டப் பகுதியின் மதிப்பாய்வினை மேற்கொள்ளுதல் மற்றும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வுகள் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்தல்;

(ii) நேர்விற்கேற்ப 17 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது 18 ஆம் பிரிவின் கீழ் அல்லது 20 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிட்டுள்ள, நகர்ப்புர திட்டப் பகுதிக்காக ஒரு முழுமைத்திட்டம் அல்லது ஒரு புதிய நகர வளர்ச்சித் திட்டம் அல்லது ஒரு விரிவான வளர்ச்சித் திட்டத்தினை தயாரித்தல்;

(iii) வளர்ச்சித் திட்டம் எதையும் தயாரிப்பதன் நோக்கத்திற்காக, தேவைப்படலாகும் நில பயன்பாட்டு வரைபடம் மற்றும் அத்தகைய பிற வரைபடங்கள் தயார் செய்தல்;

(iv) வளர்ச்சித் திட்டம் எதிலும் கருதுகிறவாறான அத்தகைய பணிகளை மேற்கொள்ளச் செய்தல்;

(v) நகர்ப்புர திட்டப் பகுதி முழுவதையும் அல்லது அதன் அதிகார வரம்பிற்குள் உள்ள பாகம் எதையும் புதிய நகரம் ஒன்றாக பெயர்குறித்து அழைத்தல் மற்றும் பின்வரும் செயற்பணிகளைச் செய்தல், அதாவது:—

(a) தொடர்புடைய பகுதிக்கான புதிய நகர வளர்ச்சித் திட்டம் ஒன்றினைத் தயார் செய்தல்; மற்றும்

(b) புதிய நகர வளர்ச்சித் திட்டத்திற்கு இணங்கிய வகையில் புதிய நகரத்தின் நில வரைபடம் மற்றும் வளர்ச்சியினைப் பாதுகாத்தல்;

(vi) அரசால், அதனிடம் ஒப்படைக்கப்படலாகும் அத்தகைய பிற செயற்பணிகளைச் செய்தல்.

(2) நகர்ப்புர வளர்ச்சிக் குழுமமானது, அதனால் தயாரிக்கப்பட்ட வளர்ச்சித் திட்டம் எதனையும் நிறைவேற்றுவதற்கான வேலைகளை, ஆணையின் மூலம், உள்ளாட்சிக்குழுமம் எதனிடம் அல்லது அத்தகைய ஆணையில் குறித்திடலாகும் பிற அதிகார அமைப்பிடம் ஒப்படைக்கலாம்.

(3) நகர்ப்புர வளர்ச்சிக் குழுமமானது, இந்தச் சட்டத்தின் கீழ் அல்லது அதில் உற்றமைந்துள்ள அதிகாரங்கள் எதையும் செயல்படுத்துவதற்கு, ஆணையின் மூலம், உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது அத்தகைய ஆணையில் குறித்திடலாகும் பிற அதிகார அமைப்புகள் எதற்கும் அதிகாரமளிக்கலாம் மற்றும் அத்தகைய அதிகாரத்தினை திரும்பப்பெறலாம்; மற்றும் இதன் பொருட்டு ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரம் எதனின் செயல்பாடானது அத்தகைய ஆணையில் குறிப்பிடலாகும் அத்தகைய கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், குறித்த சில மாற்றங்களுக் குட்பட்டு நகர்ப்புர வளர்ச்சிக் குழுமத்திற்கு பொருந்துதல்.

9—I. நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம் மற்றும் அதன் மூலம் உருவாக்கப்பட்ட வளர்ச்சித் திட்டம் எதனின் தொடர்பாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் பின்வரும் மாற்றங்களுக்குட்பட்டு பொருந்துதல் வேண்டும், அதாவது,—

(1) 2 ஆம் பிரிவில்,—

(a) (3) ஆம் கூறில், " மற்றும் 9—F ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம் ஒன்று உள்ளடங்கும்," எனும் சொற்றொடரானது இறுதியில் சேர்க்கப்படுதல் வேண்டும்;

(b) (14) ஆம் கூறில், "புதிய நகர வளர்ச்சிக் குழுமம்" எனும் சொற்றொடருக்காக, "அல்லது நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) (30) ஆம் கூறில், "அல்லது புதிய நகரத்திற்கான ஒரு இடம்" எனும் சொற்றொடருக்கு பின்பு "அல்லது ஒரு நகர்ப்புர திட்டப்பகுதி" எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்;

(2) 4 ஆம் பிரிவில், (c) கூறுக்கு பின்பு, பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(d) நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்."

(3) 16 ஆம் பிரிவில்,—

(a) முதல் பத்தியில், "உள்ளூர் திட்டக் குழுமம் ஒவ்வொன்றும்" எனும் சொற்றொடருக்காக, "ஒரு நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) வகைமுறையானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(c) விளக்கத்தில், "உள்ளூர் திட்டக் குழுமம்" எனும் சொற்றொடருக்காக, "நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) 17 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(1) 9–F ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நகர்ப்புர வளர்ச்சிக் குழுமமானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் மற்றும் தொடர்புடைய உள்ளாட்சி அதிகார அமைப்புகளுடன் கலந்தாலோசித்த பின்பு, இதில் நகர்ப்புர திட்டப்பகுதி அல்லது அதன் எந்தவொரு பாகத்திற்குமான "முழுமைத்திட்டம்" என்று அழைக்கப்படும் ஒரு திட்டத்தை தயார் செய்தல் மற்றும் அரசுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.".

(5) 18–ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(1) கூறப்பட்ட குழுமமானது, ஒரு நகர்ப்புர வளர்ச்சிக் குழுமத்தால் தயார் செய்யப்பட்ட வளர்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய நகரம் ஒன்றிற்கான இடத்தின் தேர்விற்கு பிறகு, கூடிய விரைவில், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள், இதன்பின்பு இதில், "புதிய நகரமாக நியமிக்கப்பட்ட இடம்" அல்லது அதன் எந்தவொரு பாகத்திற்குமான "புதிய நகர வளர்ச்சித் திட்டம்" என அழைக்கப்படும் திட்டம் ஒன்றினைத் தயார் செய்து அரசுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்."

(6) 19 ஆம் பிரிவில்,–

(a) (1) ஆம் உட்பிரிவில், "உள்ளூர் திட்டக் குழுமம்" எனும் சொற்றொடருக்காக, "நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (2) ஆம் உட்பிரிவில், "உள்ளூர் திட்டக் குழுமம்" எனும் சொற்றொடருக்காக, "நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(7) 20 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவின் (f) கூறில் மற்றும் (2) ஆம் உட்பிரிவின் (f) கூறில், "உள்ளூர் திட்டக் குழுமம்" எனும் சொற்றொடருக்காக, "நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(8) 21 ஆம் பிரிவில், "உள்ளூர் திட்டக் குழுமம்" மற்றும் "இயக்குநர்" எனும் சொற்றொடர்களுக்காக, முறையே, "நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்" மற்றும் "அரசு" எனும் சொற்றொடர்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(9) 22 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்:–

"22. பகுதி எதனையும் பொறுத்த ஒரு முழுமைத் திட்டம், ஒரு புதிய நகர வளர்ச்சித் திட்டம் அல்லது ஒரு விரிவான வளர்ச்சித் திட்டத்தை தயார் செய்வதற்கு ஒரு நகர்ப்புர வளர்ச்சிக் குழுமத்திடம் வேண்டுவதற்கான அரசின் அதிகாரம்.– 17, 18, 19 மற்றும் 21 ஆம் பிரிவுகளில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அரசானது அறிவிக்கையின் மூலம், பகுதி எதனையும் பொறுத்து ஒரு முழுமைத் திட்டம், ஒரு புதிய நகர வளர்ச்சித் திட்டம் அல்லது விரிவான வளர்ச்சி திட்டத்தை குறித்த தேதிக்கு முன்னதாக தயார் செய்து மற்றும் அரசுக்கு சமர்ப்பிப்பதற்கு நகர்ப்புர வளர்ச்சிக் குழுமத்திடம் வேண்டலாம்.

(10) 24 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"24. *திட்டங்களை தயார் செய்வதற்கான அறிக்கையை வெளியிடுவதற்கான அரசின் ஒப்புதல்.*– (1) அரசுக்கு ஒரு நகர்ப்புர வளர்ச்சிக் குழுமத்தினால், முழுமைத் திட்டம், புதிய நகர வளர்ச்சித் திட்டம் அல்லது விரிவான வளர்ச்சித் திட்டமானது சமர்ப்பிக்கப்பட்டவுடன், ஆனால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்கு பின்னர் அல்லாது கூடிய விரைவில், அரசானது முழுமைத் திட்டம், புதிய நகர வளர்ச்சித் திட்டம் அல்லது விரிவான வளர்ச்சித் திட்டத்தில், நகர்ப்புர வளர்ச்சிக் குழுமமானது, அது பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய மாற்றங்களைச் செய்வதற்கு கட்டளையிடலாம், மற்றும் அதன்பின், நகர்ப்புர வளர்ச்சிக் குழுமமானது, அரசால் குறித்திடலாகும் அத்தகைய காலத்திற்குள் மாற்றங்கள் செய்து மற்றும் மீண்டும் அரசிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அரசானது, அதன் கட்டளைப்படி, மாற்றங்கள் ஏதேனும் இருப்பின், அவை செய்யப்பட்ட பிறகு, முழுமைத் திட்டம், புதிய நகர வளர்ச்சித் திட்டம் அல்லது விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிப்பின், 26–ஆம் பிரிவின் கீழ் அறிக்கை ஒன்றினை வெளியிடுவதற்கு நகர்ப்புர வளர்ச்சிக் குழுமத்திற்கு, அதன் ஒப்புதலை வழங்குதல் வேண்டும்.

(11) 26 ஆம் பிரிவில்,—

(a) ஓரத் தலைப்பிற்காக, பின்வரும் ஓரத் தலைப்பானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''முழுமைத் திட்டம், புதிய நகர வளர்ச்சித் திட்டம் அல்லது விரிவான வளர்ச்சித் திட்டத்தினை தயாரித்தலுக்கான அறிக்கை.'' ;

(b) ''தகுதிவாய்ந்த திட்டக் குழுமம்'' எனும் சொற்றொடருக்காக, அது காணப்படுகின்ற மூன்று இடங்களில், ''நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) ''மண்டலத் திட்டம், முழுமைத்திட்டம் அல்லது புதிய நகர வளர்ச்சித் திட்டம்'' எனும் சொற்றொடருக்காக, அது காணப்படுகின்ற இரு இடங்களில், ''முழுமைத் திட்டம், புதிய நகர வளர்ச்சித் திட்டம் அல்லது விரிவான வளர்ச்சித் திட்டம்'' எனும் சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(12) 28—ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''28. அரசின் ஒப்புதல்.— நகர்ப்புர வளர்ச்சிக் குழுமத்தால் முழுமைத் திட்டம், புதிய நகர வளர்ச்சித் திட்டம் அல்லது விரிவான வளர்ச்சித் திட்டமானது சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் கூடிய விரைவில், ஆனால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்கு முன்பு அரசானது இயக்குநருடன் கலந்தாலோசித்த பின்பு, கூறப்பட்ட திட்டத்தை அங்கீகரிக்கலாம் அல்லது தேவையெனக் கருதலாகும் அத்தகைய மாற்றங்களுடன் அதனை அங்கீகரிக்கலாம் அல்லது இதன் பொருட்டு அரசினால் வெளியிடலாகும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி திட்டத்தை மாற்றியமைக்க அல்லது ஒரு புதிய திட்டத்தை தயாரிப்பதற்காக மற்றும் அதன் பொருட்டு அரசினால் குறிப்பிடலாகும் அத்தகைய காலத்திற்குள் ஒப்புதலுக்காக அரசுக்கு மீண்டும் சமர்ப்பிப்பதற்காக நகர்ப்புர வளர்ச்சி அதிகார அமைப்பிற்கு திருப்பியனுப்பலாம்.''.

(13) 30 ஆம் பிரிவில், —

(a) ஓரத்தலைப்பில், ''மண்டலத் திட்டம், முழுமைத் திட்டம் மற்றும் புதிய நகர வளர்ச்சித் திட்டம்'' எனும் சொற்றொடர்களுக்காக, ''முழுமைத் திட்டம், புதிய நகர வளர்ச்சித் திட்டம் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டம்'' எனும் சொற்றொடர்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(b) (1) ஆம் உட்பிரிவில், ''மண்டலத் திட்டம், முழுமைத் திட்டம் அல்லது புதிய நகர வளர்ச்சித் திட்டம்'' எனும் சொற்றொடர்களுக்காக, ''முழுமைத் திட்டம், புதிய நகர வளர்ச்சித் திட்டம் அல்லது விரிவான வளர்ச்சித் திட்டம்'' எனும் சொற்றொடர்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) (2) ஆம் உட்பிரிவில், ''மண்டலத் திட்டம், முழுமைத் திட்டம் அல்லது புதிய நகர வளர்ச்சித் திட்டம்'' எனும் சொற்றொடர்களுக்காக, ''முழுமைத் திட்டம், புதிய நகர வளர்ச்சித் திட்டம் அல்லது விரிவான வளர்ச்சித் திட்டம்'' எனும் சொற்றொடர்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(14) 32 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''32. முழுமைத்திட்டம், புதிய நகர வளர்ச்சித் திட்டம் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றினை மாற்றியமைத்தல், திரும்பப்பெறுதல் மற்றும் திருத்தம் செய்தல்.— (1) 28 ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட நகர்ப்புர வளர்ச்சிக் குழுமத்தின், ஒரு முழுமைத் திட்டம், ஒரு புதிய நகர வளர்ச்சித் திட்டம் அல்லது ஒரு விரிவான வளர்ச்சித் திட்டமானது, நேர்விற்கேற்ப இந்தச் சட்டத்தின் கீழ் தயார் செய்யப்பட்ட மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட ஒரு அடுத்த முழுமைத் திட்டம், புதிய நகர வளர்ச்சித் திட்டம் அல்லது விரிவான வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றினால் எந்நேரத்திலும் மாற்றியமைக்கப்படலாம் அல்லது திரும்பப் பெறப்படலாம்.

(2) நகர்ப்புர திட்டப் பகுதிக்கான முழுமைத் திட்டம் செயல்பாட்டிற்கு வரும் தேதிக்குப் பின்பு ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை, நகர்ப்புர வளர்ச்சி வளர்ச்சிக் குழுமமானது மற்றும் அரசால் அவ்வாறு கட்டளையிடப்படுமாயின், தேவையெனக் கருதலாகும் அத்தகைய புதிய நில அளவைகளை மேற்கொண்ட பின்பு மற்றும் தொடர்புடைய உள்ளாட்சி அதிகார அமைப்பின் ஆலோசனையுடன் முழுமைத் திட்டத்தினை சீராய்வு செய்து மற்றும் அத்தகைய திட்டத்தில் தேவையான இடங்களில் அத்தகைய திருத்தங்களைச் செய்து மற்றும் அரசின் ஒப்புதலுக்காக திருத்தப்பட்ட முழுமைத் திட்டத்தினை சமர்ப்பிக்கலாம்.

(3) தேவைப்படும் அத்தகைய திருத்தங்களுடன் மேற்கொள்ளப்படும் 26, 28 மற்றும் 30 ஆம் பிரிவுகளின் வகைமுறைகளானவை அத்தகைய திருத்தப்பட்ட முழுமைத் திட்டத்திற்கு பொருந்துதல் வேண்டும்.

(4) அரசானது, எந்த நேரத்திலும் ***தமிழ்நாடு அரசிதழில்,*** அறிவிக்கையின் வாயிலாக இந்தச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட, முழுமைத் திட்டம், புதிய நகர வளர்ச்சித் திட்டம் அல்லது விரிவான வளர்ச்சித் திட்டத்தை நேர்விற்கேற்ப, மாற்றியமைக்கலாம் அல்லது திரும்பப்பெறலாம்.'' ;

(15) (V) ஆம் அத்தியாயத்தில்,—

(a) ''புதிய நகர வளர்ச்சிக் குழுமம்'', ''ஒரு புதிய நகர வளர்ச்சிக் குழுமம்'', ''புதிய நகர வளர்ச்சிக் குழுமம்'' மற்றும் ''ஒரு புதிய நகர வளர்ச்சிக் குழுமம்'' எனும் சொற்றொடர்களுக்காக, அவை காணப்படுகின்ற இடங்களிலெல்லாம், முறையே ''நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்'', ''ஒரு நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்'', ''நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்'' மற்றும் ''ஒரு நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்'' எனும் சொற்றொடர்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) 40 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில் ''இந்தச் சட்டத்தின் கீழ் அரசினால் ஒப்புதலளிக்கப்பட்ட புதிய நகர வளர்ச்சித் திட்டத்துடன் இணங்கி புதிய நகரத்தின் வளர்ச்சியினை பாதுகாப்பதற்காக'', எனும் சொற்றொடருக்காக, ''நகர்ப்புர வளர்ச்சிக்குழுமத்தின் வளர்ச்சித்திட்டங்கள் எதனின் பயனுள்ள நடைமுறைப்படுத்துதலை பாதுகாப்பதற்காக''எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) 41 ஆம் பிரிவில், ''புதிய நகரத்தின் பகுதிக்குள்'' எனும் சொற்றொடருக்காக, ''நகர்ப்புர திட்டப் பகுதிக்குள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(d) 42 ஆம் பிரிவில், ''புதிய நகர வளர்ச்சிக் குழுமம் எதுவும்'' மற்றும் ''புதிய நகரம் தொடர்பாக'' எனும் சொற்றொடர்களுக்காக, முறையே ''நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்'' மற்றும் ''நகர்ப்புர திட்டப் பகுதி தொடர்பாக'' எனும் சொற்றொடர்களானவை, மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(e) 44 ஆம் பிரிவில், (1) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளில், ''இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய நகர வளர்ச்சித் திட்டத்தில் பணிகளை மேம்படுத்துவதற்காக மற்றும் செயல்படுத்துதலுக்காக'' எனும் சொற்றொடருக்காக அது வருகிற இரு இடங்களில், ''இந்தச் சட்டத்தின் கீழ் அதற்கு ஒப்படைவு செய்யப்பட்ட செயற்பணிகளை நிறைவேற்றுதலுக்காக'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(f) 46 ஆம் பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(16) 76 ஆம் பிரிவில்,—

(a) ''இயக்குநர்'' மற்றும் ''திட்டக் குழுமம்'' எனும் சொற்றொடர்களுக்காக அவை காணப்படுகின்ற இடங்களிலெல்லாம் முறையே, ''அரசு'' மற்றும் ''நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்'' எனும் சொற்றொடர்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (1) ஆம் உட்பிரிவில், முதல் வகைமுறையில், ''அவர் மனநிறைவடைந்தால்'' எனும் சொற்றொடருக்காக, ''அவர்கள் மனநிறைவடைந்தால்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) (3) ஆம் உட்பிரிவில், (a) கூறில் (iii) ஆம் இனத்தில், ''அவர் பொருத்தமெனக் கருதலாகும்'' எனும் சொற்றொடருக்காக, ''அவர்கள் பொருத்தமெனக் கருதலாகும்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(d) (5) ஆம் உட்பிரிவில், வகைமுறையில், ''அவரது விருப்பப்படி'', ''அவர் பொருத்தமெனக் கருதலாகும்'' மற்றும் ''அவரது மனநிறைவுக்கு'' எனும் சொற்றொடர்களுக்காக முறையே, ''அவர்களின் விருப்பப்படி'', ''அவர்கள் பொருத்தமெனக் கருதலாகும்'', மற்றும் ''அவர்கள் மனநிறைவுக்கு'' எனும் சொற்றொடர்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(17) 77 ஆம் பிரிவில் ,—

(a) ''இயக்குநர்'' மற்றும் ''தொடர்புடைய திட்டக் குழுமம்'' எனும் சொற்றொடர்களுக்காக, அவை காணப்படுகின்ற இடங்களிலெல்லாம் முறையே, ''அரசு'' மற்றும் ''தொடர்புடைய நகர்ப்புர வளர்ச்சிக் குழுமம்'' எனும் சொற்றொடர்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(18) 79 ஆம் பிரிவில்,—

(a) ''வகுத்துரைக்கப்பட்ட குழுமம்'' எனும் சொற்றொடருக்காக, அது காணப்படுகின்ற இடங்களிலெல்லாம், ''அரசு'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(1) 49 ஆம் பிரிவு அல்லது 54 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஒரு நகர்ப்புர வளர்ச்சிக் குழுமத்தின் முடிவு அல்லது ஆணை எதனாலும் பாதிக்கப்பட்ட நபர் எவரும் அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.'' ;

(c) (2) ஆம் உட்பிரிவில், ''அது மனநிறைவடைந்திருந்தால்'' எனும் சொற்றொடருக்காக ''அவர்கள் மனநிறைவடைந்திருந்தால்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல்வேண்டும்;

(19) 80 ஆம் பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(20) 81 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில் "மற்றும் 80" எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(21) 91 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், "விதிகளை உருவாக்குவதற்கான அரசின் அதிகாரம் தவிர" எனும் சொற்றொடருக்காக, " 76 ஆம் பிரிவின் கீழ் மேல்முறையீடு எதையும் விசாரிப்பதற்கான அரசின் அதிகாரம் மற்றும் விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரம் தவிர" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

தமிழ்நாடு சட்டம் 4/1971.

தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்துடனான தொடர்பு.

9—J. (1) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஒரு நகர்ப்புர வளர்ச்சிக் குழுமமானது, குடிநீர் வழங்கல் அல்லது வடிகால் சேவைகள் மற்றும் நகர்ப்புர திட்டப் பகுதி அல்லது அதன் பகுதி எதற்காகவும், இந்தச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட அல்லது தயாரிக்கப்படக்கூடிய வளர்ச்சித் திட்டம் எதனையும் உள்ளடங்கலான, அதனுடன் தொடர்புடைய பொருட்பாடுகள் பற்றிய வகைமுறைகள் எதனைப் பொறுத்தும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்துடன் முழுவதுமாக கலந்தாலோசித்து மற்றும் அதனுடன் இணைந்து செயல்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 4/1971.

(2) அத்தகைய வளர்ச்சித் திட்டம் எதன் தொடர்பாகவும், அத்தகைய திட்டத்தின் கீழ் பணி எதனையும் நிறைவேற்றுதல் அல்லது மேற்கொள்ளுதலானது, இதுவரை குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் சேவை அல்லது அதனுடன் தொடர்புடைய பொருட்பாடுகள் பொறுத்தவரையில் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்திடம் ஒப்படைத்தல் மற்றும் அதன் தனி பொறுப்பாகுதல் வேண்டும் மற்றும் இந்தப் பிரிவு நடைமுறைக்கு வருகின்ற தேதியன்று அத்தகைய திட்டத்தின் கீழ் பணி எதுவும் நிறைவேற்றுதல் அல்லது மேற்கொள்ளுதல் செயல்பாட்டிலிருந்தால், நகர்ப்புர வளர்ச்சிக் குழுமமானது 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய சட்டத்திற்கு இணங்கிய வகையில் அத்தகைய பணிகளைத் தொடர்தல் மற்றும் செய்து முடித்தல் வேண்டும்.

63—A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 63—A ஆம் பிரிவானது, அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மறுஎண்ணிடப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு மறுஎண்ணிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவிற்குப் பிறகு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது,—

"(2) நகர்ப்புர திட்டப் பகுதி ஒன்றில் நிலம் அல்லது கட்டடத்தின் பயன்பாடு அல்லது பயன்பாட்டின் மாறுதல் அல்லது நிலம் அல்லது கட்டடம் எதனின் மேம்பாட்டினை பொறுத்த நேர்வில், இந்த அத்தியாயத்தின் வகை முறைகளின் கீழ் வளர்ச்சிக் கட்டணங்கள் எதுவும், விதிக்கப்பட்ட அல்லது மீட்கப்படுமிடத்தில் மற்றும் குடிநீர் வழங்கல் அல்லது வடிகால் சேவையை ஏற்பாடு செய்தல் அல்லது முன்னேற்றுதல் தொடர்பான அத்தகைய கட்டணம் எதுவும் அல்லது அதன் பகுதி எதுவும் பொருந்துமானால் நகர்ப்புர வளர்ச்சிக் குழுமமானது அத்தகைய கட்டணம் அல்லது அதன் பகுதியினை 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்திற்கு செலுத்துதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 4/1971.

வரம்புரையாக, செலுத்த வேண்டிய மொத்தத் தொகை குறித்த சந்தேகம் அல்லது பூசல் ஏதேனும் இருந்தால், அதன் பொருட்டு முடிவானது அரசுக்கு குறித்தனுப்பப்படுதல் வேண்டும் மற்றும் அதன் முடிவே இறுதியானது".

79 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. முதன்மைச் சட்டத்தின் 79 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில், "வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பு" எனும் சொற்றொடருக்காக, "வகுத்துரைக்கப்படலாகும் ஓர் அதிகார அமைப்பு" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

111 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

7. முதன்மைச் சட்டத்தின் 111 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளானவை, சென்னை பெருநகர திட்டப் பகுதி மற்றும் நகர்ப்புர திட்டப் பகுதிகள் ஆகியவற்றை பொறுத்து, முறையே, 1978 ஆம் ஆண்டு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சட்டம் மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியச் சட்டம் ஆகியவற்றின் வகைமுறைகளுக்கு உட்பட்டு படிக்கப்படுதல் வேண்டும்.". தமிழ்நாடு சட்டம் 28/1978. தமிழ்நாடு சட்டம் 4/1971.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசுச் செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2022 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத்தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது.

**சட்ட எண். 40/2022.**

**குறித்த சில இயற்றுச்சட்டங்களை நீக்கறவு செய்வதற்கானதொரு சட்டம்.**

இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பயன்படுத்தப்பட்ட அல்லது மற்றபடி வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கிற அல்லது குறித்த வகையில் மற்றபடி வெளிப்படையாக குறித்த வகையில் நீக்கறவு செய்யப்பட்டதன் மூலம் தவிர பிறவாறு நடைமுறையில் அற்றுப்போனவையாக இருக்கும் இயற்றுச் சட்டங்கள் வெளிப்படையாக மற்றும் குறிப்பாக நீக்கறவு செய்யப்படுதல் வேண்டும் என்பது உகந்ததாய் இருப்பதால்;

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்ற பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு

2. இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இயற்றுச் சட்டங்கள் ஈங்கிதனால் அதனின் ஐந்தாவது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அளாவுகைக்கு நீக்கறவு செய்யப்பட்டது. குறித்த சில இயற்றுச் சட்டங்களின் நீக்கறவு.

3. இந்தச் சட்டத்தால் நீக்கறவு செய்யப்படும் இயற்றுச் சட்டம் எதுவும் பிற இயற்றுச் சட்டம் எதனையும் பாதிக்காது. அதில் நீக்கறவு செய்யப்பட்ட இயற்றுச் சட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கிற போதும் சேர்க்கப்பட்டிருக்கிற போதும் அல்லது சுட்டப்படும் போதும்; காப்புரை.

மற்றும் இந்தச் சட்டம் செல்லுந்தன்மையையோ, செல்லாத தன்மையையோ அல்லது செயல்திறத்தையோ அல்லது ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட எதனையும் அல்லது பாதிக்கப்பட்டதை அல்லது உரிமையையோ, உரிமை மூலத்தையோ, கடப்பாட்டையோ அல்லது ஏற்கனவே பெறப்பட்ட கடப்பாட்டை அதிகப்படியானதையோ அல்லது ஏற்படுத்தப்பட்டிருப்பதையோ அல்லது தீர்வு எதனையும் அல்லது தொடர்பான நடைமுறையை அல்லது பற்று எதனலிருந்தும் அல்லது பற்றினை விடுவிப்பதை தண்டம், உதவியையோ, கடப்பாட்டையையோ, கோருதலையோ அல்லது தேவையையோ அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட உறுதிமொழியையோ அல்லது நிரூபிக்கப்படும் கடந்தகால செயல் அல்லது விசயம் எதனையும் பாதிக்காது.

கொள்கை எதனையும் அல்லது சட்டத்தின் ஆட்சியை அல்லது ஏற்படுத்தப்பட்ட அதிகார வரம்பை அல்லது அமைவுமுறையோ அல்லது வாதுரையின் போதோ, வழக்கத்தையோ அல்லது நடைமுறையையோ அல்லது இருந்து வரும் பழக்கவழக்கத்தையோ, வழக்காறையோ, சலுகையையோ, தடையையோ, விலக்கையோ, அலுவலகத்தையோ அல்லது பணியமர்த்தத்தையோ எவ்வாறிருப்பினும் அவை முறையே எந்த முறையிலும் ஈங்கிதனால் இயற்றுச் சட்டத்தில் அல்லது இயற்றுச் சட்டம் எதிலிருந்தும் எந்தமுறையிலும் உறுதி செய்யப்பட்டிருக்கலாம் அல்லது ஏற்பளிக்கப்பட்டிருக்கலாம் அல்லது அதன் மூலம் பெறப்பட்டிருக்கலாம் என்றிருக்கிற எதுவும் பாதிக்காத வகையில் இருக்கும்;

இயற்றுச் சட்டம் எதுவும் புத்துயிரளித்தல் அல்லது அதிகார வரம்பு எதனையும் மீட்டெடுத்தல் அலுவலகம், பழக்க வழக்கம், பொறுப்பு, உரிமை, உரிமை மூலம், சலுகை, தடை, விலக்கு, பயன்படுத்துதல், செய்தொழில், நடைமுறை அல்லது பிற பொருட்பாடு அல்லது தற்பொழுது இல்லாமல் இருக்கும் பொருள் அல்லது செல்லாற்றலிலுள்ளவை இந்தச் சட்டத்தால் நீக்கறவு செய்யப்படுவதால் பாதிப்பிற்குள்ளாகாது.

## இணைப்புப்பட்டியல்.
## நீக்கறவுகள்.
## (2–ஆம் பிரிவைக் காண்க)

| *வரிசை எண்* | *ஆண்டு* | *எண்* | *குறுந்தலைப்பு* | *நீக்கறவின் அளாவுகை* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| | | | ***குடியரசுத் தலைவரின் சட்டம்*** | |
| 1. | 1976 | 31 | 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம். | முழுவதும் (தமிழ்நாடு மாநிலத்திற்கு அதன் பொருந்துகை) |
| | | | *தமிழ்நாடு சட்டங்கள்* | |
| 2. | 1873 | I | 1873 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன யானைகள் பாதுகாப்புச் சட்டம். | முழுவதும் |
| 3. | 1879 | II | 1879 ஆம் ஆண்டு நீலகிரி விளையாட்டு மற்றும் மீன் பாதுகாப்புச் சட்டம். | முழுவதும் |
| 4. | 1929 | III | 1928 ஆம் ஆண்டு ஜைனர் வாரிசுமுறைச் சட்டம். | முழுவதும் |
| 5. | 1940 | XX | 1940 ஆம் ஆண்டு இந்திய மருத்துவ பட்டங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 6. | 1942 | XXIV | 1942 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மாவட்ட நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் . | முழுவதும் |
| 7. | 1946 | XVI | 1946 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 8. | 1947 | II | 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 9. | 1947 | XXIV | 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 10. | 1949 | XXX | 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருந்துப் பொருட்கள் (கட்டுப்பாடு) சட்டம். | முழுவதும் |
| 11. | 1949 | XLVII | 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு பருத்தி (வணிக இருப்புச் சரக்குகள்) கணக்கீட்டுச் சட்டம். | முழுவதும் |
| 12. | 1951 | XXIV | 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள், மாவட்ட மன்றங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 13. | 1954 | XXIV | 1954 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 14. | 1956 | XXI | 1956 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம். | முழுவதும் |
| 15. | 1959 | 21 | 1959 ஆம் ஆண்டு இந்திய கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 16. | 1960 | 10 | 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்கூற்றியல் (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 17. | 1960 | 11 | 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு விழிவெண்படல ஒட்டுதல் சட்டம். | முழுவதும் |
| 18. | 1960 | 12 | 1960 ஆம் ஆண்டு சட்டத் தொழிலாற்றுபவர்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 19. | 1961 | 4 | 1961 ஆம் ஆண்டு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம். | முழுவதும் |
| 20 | 1964 | 20 | 1964 ஆம் ஆண்டு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம். | முழுவதும் |

| வரிசை எண் | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | நீக்கறவின் அளாவுகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 21. | 1964 | 29 | 1964 ஆம் ஆண்டு திருவாங்கூர் – கொச்சின் சுண்ணாம்பு கற்கள் (கட்டுப்பாடு) நீக்கறவுச் சட்டம். | முழுவதும் |
| 22 | 1965 | 8 | 1965 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு (தொடர்ந்து இருந்துவருதல்) சட்டம். | முழுவதும் |
| 23 | 1965 | 35 | 1965 ஆம் ஆண்டு இந்திய கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். | சட்டத்தின் 3 ஆம் பிரிவு |
| 24 | 1971 | 9 | 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) சட்டம். | முழுவதும் |
| 25 | 1971 | 27 | 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) இரண்டாம் திருத்தச் சட்டம். | முழுவதும் |
| 26 | 1971 | 31 | 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 27 | 1971 | 32 | 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) செயல்முறை ஆணைகளின் செல்லும் தன்மையாக்குதல் சட்டம். | முழுவதும் |
| 28 | 1972 | 27 | 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) திருத்தச் சட்டம். | முழுவதும் |
| 29. | 1972 | 38 | 1972 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம். | முழுவதும் |
| 30. | 1973 | 6 | 1972 ஆம் ஆண்டு மேட்டூர் நகரம், குற்றாலம் நகரம் மற்றும் பவானிசாகர் நகரம் (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 31. | 1973 | 23 | 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) திருத்தச் சட்டம். | முழுவதும் |
| 32. | 1975 | 23 | 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்பு கையுடைமையாளர்கள் (வெளியேற்றுவதிலிருந்து பாதுகாப்பு) மறுஇயற்றுச் சட்டம். | முழுவதும் |
| 33. | 1978 | 40 | 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம். | முழுவதும் |
| 34. | 1979 | 40 | 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம். | முழுவதும் |
| 35. | 1980 | 13 | 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம். | முழுவதும் |
| 36. | 1981 | 18 | 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடைநோய் (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 37. | 1982 | 38 | 1982 ஆம் ஆண்டு இந்திய கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 38. | 1982 | 50 | 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம். | முழுவதும் |
| 39. | 1986 | 45 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 40. | 1986 | 46 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 41. | 1986 | 47 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 42. | 1986 | 48 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (நான்காம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |

| வரிசை எண் | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | நீக்கறவின் அளாவுகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 43. | 1986 | 59 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம் (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 44. | 1986 | 73 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (தனிவகைமுறை மற்றும் செல்லும்தன்மையாகும்) சட்டம். | முழுவதும் |
| 45. | 1986 | 80 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 46. | 1992 | 16 | 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜி.டி.நாயுடு வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 47. | 1992 | 30 | 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 48. | 1992 | 31 | 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 49. | 1992 | 37 | 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களின் ஆடம்பர வசதி மற்றும் தங்கும் விடுதி வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 50. | 1992 | 52 | 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (மூன்றாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 51. | 1992 | 54 | 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம் | முழுவதும் |
| 52. | 1993 | 5 | 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 53. | 1993 | 22 | 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 54. | 1993 | 24 | 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 55. | 1993 | 25 | 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 56. | 1994 | 2 | 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 57. | 1994 | 3 | 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 58. | 1994 | 11 | 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம். | முழுவதும் |
| 59. | 1994 | 17 | 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 60. | 1994 | 32 | 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 61. | 1994 | 33 | 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 62. | 1994 | 37 | 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 63. | 1994 | 38 | 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 64. | 1994 | 55 | 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 65. | 1995 | 10 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |

| *வரிசை எண்* | *ஆண்டு* | *எண்* | *குறுந்தலைப்பு* | *நீக்கறவின் அளாவுகை* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 66. | 1995 | 18 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 67. | 1995 | 19 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 68. | 1995 | 20 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 69. | 1995 | 21 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 70. | 1995 | 36 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 71. | 1995 | 37 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 72. | 1995 | 39 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 73. | 1996 | 10 | 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 74. | 1996 | 30 | 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) நீக்கறவுச் சட்டம். | முழுவதும் |
| 75. | 1996 | 32 | 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களின் ஆடம்பர வசதி மற்றும் தங்கும் விடுதி வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 76. | 1996 | 37 | 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 77. | 1996 | 38 | 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 78. | 1997 | 11 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 79. | 1997 | 12 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 80. | 1997 | 13 | 1997 ஆம் ஆண்டு பொதுவிற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 81. | 1997 | 14 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டர் வாகனங்கள் நுழைவதன் மீதான வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 82. | 1997 | 30 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம். | முழுவதும் |
| 83. | 1997 | 38 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம் | முழுவதும் |
| 84. | 1997 | 39 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 85. | 1997 | 40 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 86. | 1997 | 60 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 87. | 1998 | 2 | 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (ஆறாம் திருத்த) திருத்தச் சட்டம். | முழுவதும் |

| *வரிசை எண்* | *ஆண்டு* | *எண்* | *குறுந்தலைப்பு* | *நீக்கறவின் அளாவுகை* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 88. | 1998 | 3 | 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம். | முழுவதும் |
| 89. | 1998 | 19 | 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டர் வாகனங்கள் நுழைவதன் மீதான வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 90. | 1998 | 20 | 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 91. | 1998 | 21 | 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசுச் செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.